உ

தோகையடி விநாயகர் துணை.



மயூரகிரி என்னும்

குன்றக்குடி

ஷண்முகநாதருலா.

இஃது

வேம்பத்தூர் சங்க வித்வான்களில் ஒருவரும்

தேவகோட்டை வன்றொண்டர் மாணுக்கர்களில் ஒருவரும்

இராமனுதபுரம், சிவகங்கை

உபய சமஸ்தான வித்வானுமான

பிரமஸ்ரீ சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்

இயற்றியது.

ஷையார் குமாரர்

நடேச பாரதியாரால்

நகரத்தார்கள் பொருளுதவியால்

காரைக்குடி, குமரன் பவர் அச்சுக்கூடத்தில் பிரசுரிக்கப்பட்டது.

வெகுதானிய

1938

[விலை 0-6-0.

பதிப்புரை.

வெண்பா.

பூநாறுந் தேன்பொழிலும் பொன்னுமுத்த முஞ்சொரியுந்
தேனாறு சூழுஞ் சிகண்டிவரைக்—கோனாறு
பாலனத்தன் பாலனத்தன் பாலனத்தன் றேவர்பரி
பாலனத்தன் றாளினெஞ்சே பற்று.

அன்பு கெழுமிய அறிவுடையீர்!

உலாவி னிலக்கணங்களையுந் தலத்தின் விசேடக் குறிப்புக்களையும் நூலாசிரியர் வரலாறும் பற்றி முகவுரையிற் றெளிவுற விளக்கியிருப்பதால் நன்கறியலாம். நூலினயத்தையே நனித்துணர்ந்தின்புறுந் தொழிலே பூண்ட பாவலரிந் நூலையு மங்ஙனமே யுணர்ந்தின் புறுவரென்பது பற்றி யான் ஈண்டொன்றும் விரித்திலேன். இந்நூலைப் படிப்பார்க்குச் சிறிது ஊக்கங் கொடுப்பான் கருதிச் சிறிய குறிப்புரை ஒன்று எழுதிச் சேர்த்திருக்கின்றேன்.

பொருள் தேடும் முயற்சியிலலைந்து திரிந்துகொண்டிருந்த யான் நூலச்சாகுங்காலத்துப் புரூப் பார்த்துத் திருத்திக்கொடுக்க முடியாது போனமை காரணமாகப் பிழைகள் நேர்ந்துள்ளன. அக்குறை நீங்கப் பிழைதிருத்தக் குறிப்பு மிறுதியிற் சேர்த்திருக்கின்றேன்.

மயூரகிரியின் படமும் நூலாசிரியரின் படமும் அழகிய காகிதத்தில் அச்சடித்துச் சேர்த்திருக்கின்றேன். இச்செயல் பக்திமான்களும் பாவலர்களும் யாத்திரிகர்களும் போற்றற்குரிய தாகுமென்ப தெனது துணிபு.

இந்நூற்கு முகவுரை எழுதியுதவிய காரைக்குடி வாசியும் வித்வத் பரம்பரையினருமாகிய மழவை தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ க. தெய்வராமய்யரவர்கட்கு என் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நூற் குறிப்புரைக் குதவியாயிருந்த எனது சகோதரரும் மதுரை காலேஜ் அரங்கசாமி ஐயரவர்கள் உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீநிவாச பாண்டுரங்கய்யரது பெருமுயற்சி போற்றற் குரியதே.

இந்நூல் அச்சு வாகனமேறிப் புத்தகவடிவில் வெளிவரத் திருவருள் புரிந்த ஸ்ரீ ஆறுமுகப் பெருமானது அருளிச்சத்தாலே இன்று மெனது முயற்சி கைகூடுமாறு திருவருள் புரியும்வண்ணம் அஞ்சலி செய்து வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

பி. நடேச பாரதி,
வேப்பத்தூர்.
28—10—38.


வெகுதானிய-௵
ஐப்பசி ௴ 12உ.
சுக்கிரவாரம்




இராமநாதபுரம், சிவகங்கை
உபயசமஸ்தான வித்வான்

வேம்பத்தூர்

சிலேடைப்புலி பிரமஸ்ரீ. பிச்சுவய்யர் அவர்கள்



குன்றக்குடி மலையின் தோற்றம்.



பாரதியார்-பாடியவெண்-பா.

நந்தூருந் செந்தூரும் நன்கார் பொதிகைமலை
வந்தூருங் குன்றை வளநகரும்—இந்தூரும்
தென்பரங்குன் றப்பதியும் சேர்முருகா மால்மருகா
அன்புவைத்தே நல்வாக் கருள்.

உ

முருகன் துணை

முகவுரை.

வெண்பா.

ஆக்கல் புரத்தல் அழித்தல் மறைப்பருளல்
போக்கலடி யார்துயரம் புன்மையெலாம்—நீக்கலிவை
என்றும் மயின்மே லிருந்து வரமளிக்குங்
குன்றை முருகன் குணம்.

'குன்றக்குடி' என்னும் இத்தலம், செந்தமிழ்ப்பாண்டி வள நாட்டின்கண், சைவ சமயாசாரியர்களால் பாடப்பெற்ற பதினான்கு தலங்களில் ஒன்றாகிய திருப்புத்தூருக்கு நேர் கிழக்கே ஐந்து நாழிகை வழித்தூரத்தில், மூர்த்தி தலம் தீர்த்தங்களாலும், பிறநலங்களாலுஞ் சீரும் சிறப்புமுற்று விளங்குவது. ஸ்ரீ சுப்ரமண்யக் கடவுளின் ஆறுபடை வீடுகளில் குன்று தோறாடலைச் சார்ந்தது. அருணகிரியார் பாடிய பல திருப்புகழ்ப் பாடல்களைக் கொண்டது. அரசவனம்-மயின்மலை-சிகண்டிமலை-மயூரகிரி-மயூர நகரம்-கிருஷ்ண நகரம்-குன்றக்குடி-குன்றாக்குடி-குன்றை என்ற பல பிரதி நாமங்களையும் பெற்றது. சிலா சாசனங்களால் திருக்குன்னக்குடி என வழங்கப் பெறுவது. சூரியன், பிரமன், கிருஷ்ணன், இந்திரன், மன்மதன் முதலான தேவர்கட்கும், அகத்தியன், வசிட்டன், நாரதன் முதலிய இருடிகட்கும், கருடன் மயில் முதலிய பறவைகட்கும் இஷ்டசித்திகளையும், சாபவிமோசனங்களையும் அளித்த வரலாறுகளை விளங்க வுரைக்கும் புராணச் சிறப்பையும் உடையது. சரவணப் பொய்கை-வையாபுரி-மருதாபுரி-மதுநதி-பாண்டவ தீர்த்தம் முதலான தீர்த்த விசேடங்களையுந் தன்பாற்கொண்டது.

இத்தகைய பல பெருமைகளும் வாய்க்கப்பெற்ற இத்தலத்தின்கண், வடபால் முகமும், தென்பால் தோகையுங் கொண்டு நிற்பதொரு மயிலின் வடிவாக அமைந்த மலையின் மேல், கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்ரமண்யக் கடவுள் ஸ்ரீ வள்ளி தெய்வகுஞ்சரி அம்மையாருடன், நேமநாடுடைய வள்ளல், தேனாறுடையான், குன்றையூருடையான், மயூரகிரிநாதன், மயின்மலைக் கந்தன், குன்றை முருகன், என்று புலவர்களால் பலவாறு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

யும் பெற்று விளங்கியமை தமிழுலகம் நன்கு அறியும். பொறுமைக் குணம் உற்றவராயும், பொருமைக் குணம் அற்றவராயும், நன்றி மறவாத நலமுடையராகவும் இருந்தபடியால், கற்றுரை மனமகிழ்ந்து போற்றுதலும், கற்பாரை மனம் நெகிழ்ந்து தேற்றுதலும், உபகாரிகளைச் செய்யுட்களால் புகழ்ந்து ஏற்றுதலும் இவருடைய செயல்களாக விளங்கின. சேதுபதி அரசர்பால் தமக்குள்ள நன்றி மறவாத் தன்மைக்கு எடுத்துக் காட்டாக இவருடைய நான்காவது குமாரருக்கு 'பாஸ்கரன்' என்ற பெயர் வைத்திருப்பதொன்றே புலப்படுத்தும்.

இவர் பாடியவும் அச்சிடப் பெற்றவையாயுமுள்ள நூல்கள்:— திருப்பரங்குன்றத்து முருகன் ஆனந்தக்களிப்பு, பனங்குடிப் பெரிய நாயகியம்மை பதிகம், ஸ்ரீ சிருங்ககிரி சங்கராசாரியர் பதிகம், பொன்மாரிச் சிலேடை வெண்பா, மதுரைச் சுந்தரேசர் நிரோட்டயமகவந்தாதி முதலியனவாம். இனி அச்சிட வேண்டியனவும் பலவுள்ளன.

தமிழ் வழங்கும் நாடெங்குஞ் சென்று புகழ்பெற்ற இவர் அவ்வக்காலத்தில் பாடிய தனிச் செய்யுட்களும் சிறப்புக் கவிகளும் எண்ணிறந்தன; அவற்றை யெல்லாம் ஒருங்கு சேர்த்துச் சந்தர்ப்பக் குறிப்புக்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தினுல் ஒரு பெருங் கவிஞரின் வாழ்க்கைச் சரித்திரம் தமிழ் நாட்டில் நிலைநிற்க ஏதுவாகும். அவருடைய குமாரர்கள் நாளடைவில் இம்முயற்சியை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்நூலாசிரியரின் புத்திரராகத் தற்போது உள்ளவர் மூவர். அவர்களில், மூத்தவரான மகாதேவ பாரதி தமிழ்ப் பயிற்சியும் பாடுந்திறமும் பெற்றுத் தந்தையார் புகழைப் பாதுகாத்து வருகிருர். அவருக்கு இளையவரான நடேச பாரதி, திருப்பனந்தாள்மடத்தில் அதிபதியாக இருந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகளிடம் கல்வி பயின்று விரைந்து கவிபாடும் வன்மையும் பெற்றுத் தந்தையார் செய்த நூல்களை யாராய்ந்தும் வெளிப்படுத்தியும் வருகிருர். அவ்விருவருக்கும் கனிட்டரான பாஸ்கர பாரதி மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் கற்றுத் தற்போது மதுரைக் காலேஜில் தமிழ்ப் பண்டிதராயிருக்கிருர். இந்த உலாவை அச்சிடுவித்து வெளியிட்ட நடேச பாரதியாரின் செயல் போற்றற் குரியதேயாம்.

இந்நூலை நாம் வாசிக்கும் பொழுது, சிவபிரான் சீவர்கள் பால் வைத்துள்ள அளவற்ற கருணையையும், முருகக் கடவுளின் அவதார காரணமும், அவர் படைத்தல் முதலிய தொழில் புரிந்த

வரலாறும், வாகனமாகிய மயில் சாபம் பெற்று மலைவடிவான விதமும், பின்னர் அச்சாபம் நீங்கப்பெற்ற செய்தியும் ஆகிய விவரங்களை விரிவாக அறியலாம்.

அன்றியும்,

இத்தலத்தின் நடைபெறுந் திருவிழாக்களின் சிறப்புக்களையும் அவற்றிலுள்ள விசேடங்களையும், அத்தலத்தில் தருமம் புரிந்த பெரியார்களையும், தரும வகைகளையும், பழைய பழக்க வழக்கங்களையும், அறுமுகக் கடவுளுக்கு ஆறுகாலமும் பக்தியுடன் பூஜை புரிந்துவரும் ஆதி சைவர்களின் நற் செய்கைகளையும், ஏனைய ஸ்தானீகர்களின் வரலாறுகளையும் அக் காலத்தில் மடாதிபதியாக இருந்து இந் நூலுக்குத் தக்க சன்மானமளித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகரவர்களுடைய அருங் குணங்களையும், இவை போன்ற பல விஷயங்களையும் பரக்கக் காணலாம். இவற்றால், இந் நூல் பின்னொரு காலத்தில் காலவாராய்ச்சிக்கும் பிறவாராய்ச்சிகட்கும் உதவியாக இருக்குமென்பது ஒருதலை.

இந் நூல் இருபதாம் பக்கத்தில்................நிம்பை யூர்மறையோர் சந்ததியில்-வந்து சரண்-பாடுமுத்து வேங்கடசுப்பையனுலாவினைக் கொண் டாடு முருக னமரேசன்" எனத் தம் இயற்பெயருங்காட்டிப் பத்திவசப்பட்டு மனமுருகிப் பாடியிருத்தலால், தமிழன்பர்களும் முருகனடியார்களும் இதனைப் படித்து மகிழ்வார்கள் என்பது நிச்சயம்.

பல நலங்களும் வாய்ந்த இந் நூலுக்கு நல்லறிஞர் எழுத வேண்டிய முகவுரையை, என்னை எழுதும்படி, ஆசிரியரின் குமாரர்கள் வற்புறுத்தினார்கள்; அவர்கள் விருப்பத்தை மறுக்க முடியாமலும், நூலாசிரியர் பால் எனக்குள்ள அன்புக்கு அறிகுறியாகவும் முருகக் கடவுளின் திருவருளைப் பெற எண்ணியும், இம்முகவுரையை ஒருவாறு தெரிந்தவரை எழுதினேன்.

"குன்றை முருகன் குரைகழல் பணிவோர்
என்றுநல் வாழ்வோ டினிதிருப் பாரே"

இங்ஙனம்,

சு. சிதம்பரமையர்,

தமிழ்ப் பண்டிதர்,

காரைக்குடி.

10—10—38.

சாற்றுக் கவி.

இந்நூலாசிரியர் மாப்பிள்ளை

கே. கோவிந்த பாரதியார் பாடிய

இருபத்து நான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பூமேவு மன்பாம் வலைப்பட் டரன்றெண்டு
புரிதென்ன வன்மரபினிற்
புயலையொத் தருள்கொடைக் குலசேக ரப்பெயர்ப்
புரவலவ னூற்கலியுகம்
புக்கபதி னுருவ தாண்டிற்ப்ர திட்டைசெய்
புனல்வைகை யின்வடகரை
பொலிபூக மென்வாழை வளர்நிம்பை யூரிற்
பொருந்திருக் வேதமோதும்
நாமேவு விப்பிரர்க ளீராயி ரத்தொடிரு
நால்வரிற் சிவிகைபெற்ற
நாவலவ ராறுபத் தீரிரண் டவர்களால்
நத்துபக வத்கீதைசீர்
நண்ணுதிரு விளையாடல் பாடுதுறை பாகவதம்
நற்கலம் பகமழகர்மேல்
நவில்குழங் தைத்தமிழ் சவுந்தரிய லகரியுயர்
ஞானவா சிட்டமுதலாத்
தேமேவு வடமொழியி னுள்ளவும் புதியவுஞ்
செந்தமிழி னினிதியற்றித்
திகழ்வுற்ற விவர்தமிற் கவிராஜ பண்டிதன்
றிருமா புதித்திளமையிற்
றேவைவன் றொண்டர்தம் பார்கலைகள் கற்றுச்
சிலேடைநிமி டத்தியற்றிச்
சிவகங்கை முகவைச் சமஸ்தான வித்வச்சிகாமணி
சமஸ்திதன்னில்

மாமேவு நவகாளி தாஸனிவ னென்றெவரும்
மதிமுத்து வேங்கடசுப்ர
மண்யனா கியபிச்சு பாரதிகள் பொன்னுலக
வாணர்க்கு முன்னாளொடு
மால்பயோ ததியமு தளித்ததிற் பூவுலக
வாணர்க்கு மதுரமிகவும்
வாய்ந்திடு மயூரகிரி வேளுலா வழுதினை
வழங்கினன் வாழிமாதோ.

வெண்பா.

குலாவுமயிற்—குன்றூர்—குமரன்—குகன்மே
லுலாவியற்றி வுள்ள முவந்தான் சிலேடைப்
புலிபிச்சு வையரெனும் பூசுரன்வேம் பத்தூர்க்
கலைவல்லா னாசு கவி.

கவிச்சக்கரவர்த்தி,
இராம. வைத்தியநாத சர்மா.

உ

தோகையடி விநாயகன் துணை.

காப்பு.

நேரிசை வெண்பா.

மாமேவு தென்சிகண்டி மாமலைமேல் வீற்றிருக்குந்
தேமேவு கந்தனுலாச் செப்பவே—சேமேவை
வாகை யடியானை வாராதே திக்குலவு
தோகை யடியானை துணை

நூல்.

1. திங்களொடு கங்கையணி செஞ்சடிலன் மாலுடனே
பங்கஜனும் போற்றும் பரமேட்டி—துங்கப்

2. பதஞ்சலிக்கும் வண்ணப் பரும்புலிக்கும் மன்றிற்
பதஞ்சலியா நர்த்தனஞ்செய் பண்பன்—கதஞ்சொலிக்குந்

3. தண்டதர னோடெதிர்த்துத் தன்னைப் பணிந்திடுமார்க்
கண்டனைக்காத் தாண்டகழற் காலினான்—முண்டகத்தாள்

4. வந்ததிருப் பாற்கடலை வாய்விட் டமுதசிறு
மைந்தனுக்குத் தந்த மகாதாதா—சுந்தரஞ்சேர்

5. மாரனைமுன் கண்ணான் மடிய வெரித்தவன்றன்
தாரம் புலம்பவுருத் தந்தபிரான் றீரமுள்ள

6. வண்ணமலர்ப் பாதமிசை வந்தித் தருச்சனைசெய்
கண்ணனுக்கு முன்சக் கரங்கொடுத்தோன்—
றிண்ணமின்றி

7. மங்குவிளக் கைத்தூண்டு மாவெலிக்கு மூவுலகச்
செங்கோல் கொடுத்த தியாகேசன்—றங்கியவெண்

8. ணாரை கழுகலவன் நாகஞ் கரிக்குருவி
தேரையெறும் பாடு சிலந்திமந்தி—யாறுமிவை

9. தத்தமனோ பீஷ்டமெலாந் தந்துமலர்த் தாள்வணங்கும்
பத்தரையாள் கின்றகிரு பாமூர்த்தி—நத்தணிந்த

10. மாலின் பதமும் மலர்மகனார் வாழ்பதமுஞ்
சீலமிகு விண்ணிந் திரன்பதமுஞ்—சாலநமன்

11. தங்குபத முங்கற்பாந் தத்தழியுங் காலத்தும்
பொங்கிவளர் தென்கயிலைப் பூதரமேற்—சங்கையிலா
12. வேதா கமமுழங்க வேதனுமா லுங்கலிநீங்
காதா வெனவேகை கட்டிநிற்க வாதாரச்
13. சத்தியுட னோலக்கந் தன்னிலுறை வேளையினில்
அத்திரியின் புத்திரியா ளையனைப்பார்த் துத்தமர்வாழ்
14. காசினியிற் கற்பாந்த காலமுடி வானதனாற்
கீசகமைந் தர்பஞ்ச கிர்த்தியமு—நேசமுறச்
15. செய்யவருள் செய்யெனவே செப்புங்கா லக்குயிலை
அய்ய னிரண்டஞ்ச மாக்கியே—மெய்யினிலோர்
16. அஞ்சந் தனைச்சத்தி யாகவைத்தோ ரஞ்சத்தைக்
கஞ்சமுக மொன்றிரண்டு கானுடனே—விஞ்சு
17. கரக மலமிரண்டு கண்டுவிசா கன்சுந்
தரமிகுகு கன்ஞான சத்தி—தரனெனவே
18. எண்டிசையும் போற்றுபெய ரிட்டு மிகுமாற்றல்
கொண்டமயி லேறக் கொடுத்ததற்பின்—மண்டவேல்
19. தன்பா லிருக்குஞ் சயந்தன் முதலோரை
அன்பார் பணிவிடைக்கா ளாக்கியே—முன்புபோல்
20. ஐந்தொழிலுஞ் செய்யெனத்தன் னையனுரைப் பக்குமரன்
கந்தகிரி மேலியற்றுங் காலத்தி—லந்ததிரூழ்
21. காசினியி லேயுயர்சா கத்தீ வினுக்கிறையாம்
ஈச னருடங் கெழிற்சூர—ஞசகன்ற
22. தம்பியா கும்பதுமன் றாரகன்சிங் கன்னுடனே
உம்பருறை காஞ்சியெனு மோர்தலத்திற்—சம்புமகன்
23. தாண்டுபரி மஞ்ஞையெழிற் சார்பதவி யெப்பொழுதும்
வேண்டித் தவஞ்செய் விதத்தையறிந்—தீண்டியே
24. மற்றொருகா லத்தினெடு மான்முதலோர் கந்தகிரி
யுற்று முருக னுதவுவரம்—பெற்றுவிடை
25. கொண்டுதிரும் பும்பொழுது கோலமயூ ரப்பரியைக்
கண்டுதிருக் காஞ்சியிலக் காவலர்கண்—மண்டித்

26. தவஞ்சய் வதனைமுன்பு சாற்ற மயிலுங்
கவஞ்செய் வினையகற்றுங் கந்த—னவஞ்செய்

27 மலரடிசிந் திக்க மயிலெண்ணம் போலும்
வலமிகுத்த வந்நால் வருக்கு—மிலகுமலைப்

28. பேரன்சா ரூபம் பிறங்கத் தரவவரும்
ஏரமருந் தம்மிதயத் தெண்ணத்தைக்—காரமரும்

29. மாமன் விதிமுதலோர் மாய்த்ததற்கு மாறுகச்
சேமமிலாத் தீங்கு செயநினைந்தே—தாமிருக்குங்

30. காலத்தின் மான்முதலோர் கந்தகிரிக் கேகிவந்து
காலனைய தம்வா கனத்தையெலாங் கோலமயிற்

31. பாணிறுத்தி யேகுமந்தப் பான்மையறிந் தந்நால்வர்
மாணிறுத்து துங்க மயிலின்பால்—வேணிறுத்து

32. சீர்த்தியனைத் தாங்குநினைச் சேவியா திங்குறுதல்
பார்த்தனையா வென்னப் பகருதலும்—மூர்த்திமயில்

33. அன்ன மனமாக வக்கருட னேகரியாத்
தின்னவதைக் கண்டவர்போய்ச் செப்புதலும்—
வன்னமுகின்

34. மானு நெடுமாலும் மைந்தனுந்தஞ் சிந்தைநொந்து
வானும்ப ரோடயனை வந்தித்தே—தேனமரும்

35. நீபவனத் தாமா நினதுமயி லெம்பரியைச்
சோபமுறத் தின்னதெனச் சொல்லுதலுங்—
கோபமுற்றுத்

36. தன்மயிலை நோக்கவவர் தம்பரியைக் கக்கினபின்
வன்மை திகழுமயில் வாகனத்தை—நன்மைதிகழ்

37. வள்ளிமணா ளன்றயைநீ வையாத தாலகத்தில்
எள்ளிமலை யாவா யெனச்சவிக்கத்—துள்ளிமயில்

38. அவ்விடத்தில் வாய்விட் டலறிமன மானதஞ்சி
எவ்விடத்தி லென்ன வியம்புதலுஞ்—செவ்விதிகள்

39. ஒப்புயர்வி லாததிருப் புத்தூர்க் கிழக்கான
பிப்பிலவ னத்திலென்று பேசினபின்—னப்படியே

40. சாபமுற்ற மஞ்ஞையெழிற் சண்முகனைக் குஞ்சரியைக்
கோபவிதழ் வள்ளியினைக் கும்பிட்டுச் சோபைமிகுந்
41. தண்டலைசூழ் பாண்டியதே சத்தினைநோக் கிச்சென்று
சண்டனைவெல் லீசன் றலமனந்தங்—கண்டுவந்து
42. போற்றிவள மேவுதிருப் புத்தூர்க்கு வந்துமலர்
தூற்றிப் பரனைத் தொழுதேற்றித்—தோற்றமிகு
43. சீதவா சாடவியிற் சேர்ந்து மயூரகிரி
நாதனென வோங்குதிரு நாமமிட்டுச்—சோதிலிங்கந்
44. தாபித் தடிவணங்கிச் சண்முகவேள் கோபமுற்ற
பாபிக்கு நின்கடைக்கண் பாரென்று—தீபிகைபோல்
45. ஆதிமயி னுகவடி வாகி வடமுகமாய்
மாதிசையெ லாம்விளங்க மன்னியதா—லீதுநிற்க
46. பொன்னுன மின்மருகன் போர்க்கிசைசூ ரன்முதலா
மன்னுல் வரையு மழைத்துமஞ்ஞைக்—கின்னுளில்
47. ஈனவிடர் செய்தமையா லிவ்வுலகி னன்மையிலாத்
தானவரா வீரெனவே சாபமிட—வானவரை
48. ஆண்டவடி வேலவநிற் கியாம்வா கனமாக
வேண்டு மெனவோர் விருப்பத்தா—லீண்டுல
49. கத்தி னியன்மறந்து காஞ்சியிற்ற வம்புரியெஞ்
சித்தவெண்ணத் தைக்கெடுத் தேவருத்த—வித்தரையிற்
50. றீங்குசெய வெண்ணிச் சிகண்டியின்பாற் சொல்லியபின்
ஆங்கதனுல் வந்தபிழை யத்தனையுங்—காங்கேயா
51. தீர்த்தெமதெண் ணத்தையருள் செய்யெனவந் திக்கமுகம்
பார்த்துயருஞ் சூரன் பதுமனிவர்—கீர்த்திபெற்ற
52. ஏகவடி வாய்மற் றிருவராரி யானைமுக
மாகவுதித் தாயிரத்தெட் டண்டமுந்தம் வாகடைய
53. விண்ணேர்க்கு நீர்பகையா வீரந்தக் காலத்து
மண்ணேர் புகழ மறைதுதிப்பத்—தண்ணூரும்
54. ஆறுமுகத் தோடுபிறந் தம்புவியி னீர்புரிந்த
தூறுபடு குற்றந் தொலைவித்து—மீறுமனத்

55. தாசைப் படிநா மருளுவமென் றேதவவர்
மாசகன்ற ரூபமட மாயையின்பாற்—காசிபர்க்குப்

56. புத்திரராய் வேள்வி புரிந்தரன்பா லோங்கியசெல்
வத்திர நூற் றெட்டுயுக வாழ்நாள்—சகத்ரத்தெட்

57. டண்டவர சாட்சியும்பெற் றண்டரெலாந் தொண்டுசெயப்
பண்டமர்ம கேந்திரப்பேர்ப் பட்டணத்திற்—கண்டகராய்

58. வீற்றிருப்போர் செய்கொடுமை விண்ணிறைவன் சிந்தையினில்
ஆற்றாது புத்தியின்பா லாய்ந்துரைப்பப்—போற்றிவிதி

59. மாலுக் குரைப்பவந்த மால்கயிலைக் கேகிநந்தி
பாலுக்கி நின்று பணிந்துரைப்பச்—சேலுக்குங்

60. கண்ணியிடப் பாகமுறை கண்ணுதல்பாற் சென்றுநந்தி
விண்ணவர்துன் பத்தை விரித்துரைப்பப்—புண்ணியனுஞ்

61. சங்கப் புலவர் தமைக்காக்க வைக்காமல்
இங்கழைத்து வாவென் றியம்புதலுந்—துங்கநந்தி

62. வந்துதிரு முன்னழைப்ப வானவரா மான்முதலோர்
எந்தைமலர்த் தாளை யினிதேத்திச்—சுந்தரனே

63. காலகா லாநீல கண்டா மஹாதேவா
சூலதரா ஞானபரஞ் சோதியே—யாலமெனுஞ்

64. சூரன் முதலோர் செய் துன்பப் பெருக்கமெலாந்
தீர வுளக்கருணை செய்யென்ன—வாரணியுஞ்

65. செஞ்சடையோ னவ்விதமே செய்வோ மெனவுரைப்ப
வஞ்சமரர் மேருவின்பா லார்ந்திருந்தார்—கொஞ்சுமதி

66. உள்ளான் மலையனத்தை யுற்றுமணஞ் செய்தடியார்
தள்ளாக் கயிலா சமலையுற்று—வெள்ளேற்றூர்

67. அண்ணறிரு வோலக்க மாகவெழுந் தங்கமலக்
கண்ணியுட னேயிருக்குங் காலையினில்—வண்ணமிகும்

68. அஞ்சுமுக மாறுமுக மாய்நுதற்கண் ணுறினிலும்
புஞ்சமுட னுறு பொறிசிதறி—விஞ்சுலகை

69. வாட்ட வலைந்தறிந்து வாயுவுடன் றேயுவினை
யீட்டமுள்ள கங்கை யிடச்செய்ய—வோட்டமுள்ள
70. கங்கை சரவணப்பொய் கையி லொதுக்கவதிற்
சங்கரனே நேராகச் சண்முகமுந்—துங்கவரை
71. அன்னபுய மீராறு மாக வவதரித்துத்
தன்னிகரில் கார்த்திகையாந் தையலர்பால்—வன்னமுலை
72. தங்கியபா லுண்டுகுழந் தையாற தாய்க்கந்தன்
அங்குவிளை யாடி யமர்பொழுதின்—மங்கையொடுஞ்
73. சாருஞ் சிவபெருமான் றன்சுதனைக் கண்டுலகில்
ஆரும் பெருமகிழ்ச்சி யாகிநிற்ப—வோருருவாய்
74. அன்னங் கரத்திலெடுத் தையன் கரத்தேற்றித்
தன்னிகரி லாக்கயிலை தங்கினபின்—முன்னமே
75. கெண்ணியவான் கண்ணக் கினிப்பொறிக்கா யஞ்சியகல்
பண்ணியவுஞ் சொல்லிப் பதச்சிலம்பி—னண்ணுந்
76. நவரத் தினமுதிர்ந்து நங்கைவடி வாயந்
நவரத் தினப்பெயரே நண்ணிச்—சிவபெருமான்
77. தம்மையிச்சித் துக்கருப்பந் தங்கிநவ வீரரைப்பெற்
றம்மயிலின் வேர்வையினு ரூயிரம்பேர்—விம்மிவர
78. வாகவிலக் கத்தொன்ப தானசெய வீரருடன்
சோகவிருள் போக்குஞ் சுடர்வேல—ஞேகைமிகக்
79. காட்டி விளையாடுங் காலத் தரிமுதலோர்
மீட்டுங் கயிலையினின் மேவித்தம்—பாட்டையெலாஞ்
80. சொல்லித் துதித்துநிற்கச் சுந்தரே சக்கடவுள்
முல்லைநகை யோடு முகமலர்ந்து வல்லவனுந்
81. தன்பா லனையழைத்துத் தானவரை வென்றுசுரர்க்
கன்பா யனுக்கிரகித் தானென்ன—வின்பான
82. வீரபா குத்தேவர் வெற்றிப் பதினொருவர்
பாரமர்செய் யண்டர் பரணனுளன்—றீரமிகும்
83. இவ்வலவ ரோடுமயி லேறத்தே ரீந்தகத்தில்
எவ்வமின்றிப் போய்வருதி யென்றுரைப்ப—வவ்விதமே

84. தேரூர்ந்து செல்பொழுதே சீறுகிர வுஞ்சமொடு
காரூர்மெய்த் தாரு கனைவீட்டிச்—சீரோடு

85. மண்டலைசூ ழுஞ்செயந்தி மாநகரில் வந்திருந்து
கண்டகரை வெல்லக் கருதியே—தொண்டுபுரி

86. வீரபா குத்தேவ வித்தகரைத் தூதனுப்பித்
தீரமிகு பூதகணச் சேனையொடுந்—தாரணியோர்

87. செல்லா மகேந்திரத்திற் சென்றுபிறை போல்வளைந்த
பல்லாரும் பானுகோ பன்சிங்கன்—செல்லேற்றின்

88. சீரமருஞ் சேனையெலாஞ் செற்றுறு நாளினுக்குட்
சூரனையும் வேலாற் றுணிப்படுத்திக்—காரசுரர்

89. எண்ணப் படிமயில்செய் தேறிப் பதுமனையும்
வண்ணக் கொடியாக வைத்துக்கொண்—டண்ணுஞ்

90. செயந்திபுரம் வந்து திருப்பரங்குன் றத்துக்
கியந்துவைக்க வாங்கே வெழுந்து—நயந்திகழும்

91. மாகவிடைக் குஞ்சரியை மன்றலியற் றிச்சசியின்
மோகனைவான் சென்று முடிசூட்டி—வேகமுடன்

92. மன்னிவள ருங்கயிலை மாமலையிற் சென்றுபெற்ற
வன்னையுடன் றாதை யடிவணங்கி—யுன்னிவளர்

93. கந்தகிரிக் கேகிக் களித்திருக்குங் காலத்தில்
எந்தைதனித் துத்தணிகைக் கேகியே—வந்தரத்தோர்

94. கொண்டாடத் தங்கியிருக் கும்பொழுதி னாரதர்தேன்
வண்டார் குழலியெனும் வள்ளியைக்கண்—டுண்டான

95. சந்தோடத் தான்முருகன் றாள்வணங்கி மாதரெல்லாம்
வந்தோத மிக்க மயல்பொங்கிப்—பந்தோடு

96. மாதினையே காத்திருக்கும் மாதினையே கண்டுமதன்
சூதினையே வெல்லத் துணிந்துகிழ—வேதியர்போற்

97. சென்றுமணஞ் செய்துதன்பேர் செப்புகிரி சேர்ந்துவள்ளி
குன்றைப் பழிக்குமலைக் குஞ்சரியா—ளென்று மகிழ்ந்

98. தோங்கவிருந் தாதிமயிற் குற்றசா—பந்தவிர்க்க
மாங்குயிலை யொத்தமொழி மாதருடன்—றேங்கமழும்

99. மாமரமாய் நின்றிலகு மாவலவ னாமயின்மேற்
காமரத்தை யொத்தவிரு கண்மடவார்—சாமரங்கள்

100. வீசக் கலாமதிபோன் மின்னிக் குடைவிளங்கா
ஆசகன்ற பேரிசின்ன மார்ப்பரிப்பப்—பூசலிடு

101. பூதகணஞ் சூழப் பொருவீர பாகுவள்ளல்
ஆதவனைப் போல வருகுநிற்பப்—போதமுன்பு

102. சோர்ந்த மயின்மலைப்பாற் றோன்றுதலுங் கண்டவுடன்
ஆர்ந்தகரு ணைக்கடலா மண்ணலருள்—சார்ந்துமகிழ்

103. தங்கு மலையோரஞ் சஞ்சிகண்டி யாயோரஞ்
சங்கு வடுமாகத் தானமரச்—செங்கையினாற்

104. சாலமயி லின்முதுகைத் தைவந்து வேண்டுவதென்
கோலமயி லேநம்பாற் கூறென்ன—வேலவனே

105. என்னஞ்ச மாகநின்ற விந்த மயின்மலைமேல்
நண்ணிநிம யூரகிரி நாதனென—மன்னுபெயர்

106. கொண்டுதங்கி யார்க்குங் குறித்ததளித் துன்பெயரால்
அண்டர்புகழ் தீர்த்த மமைத்தெனக்குத்—தொண்டுபுரி

107. சாரூப மீந்தருள்வாய் சண்முகனே யென்றுசொல
ஆரூரன் பெற்ற வருமை மகன்—காரூர

108. ஆடுமயிற் சொற்படியே யங்கிருந்து தேவரெலாந்
தேடு மயின்மலைக்குத் தென்பாலி—னாடுபுகழ்

109. தம்பெயரி னாலொருதீர்த் தந்துறக்க வாணருடன்
அம்புவியோர் போற்றிடவுண் டாக்கியே—வும்பருமி

110. தன்பெருமை சொல்லத் தகாதெனவே சொல்லியபின்
அன்பருளம் போலு மருண்முருக—னின்பான

111. சாரூபம் வேண்டிற் றருவார்சீர் காழியென
வோரூர்க்குத் தென்பாலோ ரோசனைக்குட்—டேரூரும்

112. மாயனருச் சித்தரன்பான் மன்னுவரம் பெற்றதனால்
மாயூர மென்னுமொரு மாதலத்திற்—போயரனை

113. எகமன மாயருச்சித் தீசனுக்கு மூரினுக்கும்
வாகமரு நின்பெயரே வைத்துமனத்—தோகையுடன்

114. அங்குவதி டயாக வப்பொழுது நாமெழுந்து
புங்கவரு ணின்பாற் புரிவமெனத்—துங்கமயில்

115. சீரார் மலையினுக்குத் தென்மேற்கிற் றன்பெயரால்
ஏராருந் தீர்த்த மினிதியற்றி—நேராருந்

116. தானமியற் றிப்பொருப்பிற் றங்குமயூ ரேசுரனை
ஞான மயூரகிரி நாதனையன்—பானவந்த

117. நம்புரிந் தேய்ந் துவிடை நண்ணிக்கா வேரியிற்சென்
றம்புவிபோற் றுந்தான மாற்றியே—வம்புமலர்த்

118. தாருமிகு சீகாழிச் சம்புவையர்ச் சித்துயர்நெற்
போருலவு மாயன் புரம்வந்து—காருணிய

119. மூர்த்தியையர்ச் சிக்கவந்த மூர்த்திகடு வாரரவை
ஈர்த்துவரு மஞ்ஞை யினைப்பார்த்துப்—பூர்த்தியதாய்ச்

120. சீரார்நம் பத்தி சிறந்திடுநீ யுன்னுடைய
பேரார் மலையிலுற்றெம் பிள்ளையின்பா—லோரார்

121. அவனதுசா ரூப மடையென் றருளிச்
சிவபெருமான் மால்விடைமேற் செல்லக்—கவனமயில்

122. சீராரும் பூசையினைச் செய்தபின்மா யூரமென
வாரார்மா யன்புரம்பே ராயினவா—லேராரும்

123. ஈசன் பெருமஞ்ஞை யின்பெயரே சாரவதில்
ஆசையுடன் றங்கி யமருமயிற்—றேசமருந்

124. தன்மலைக்கு வந்துதந்தை சாற்றியதெல் லாம்புகல
வன்மைதிகழ் துங்க வடிவேல—னன்மையுற்ற

125. மாமயிலை நோக்கியிந்த மண்டலமெல் லாமதிக்கச்
சேம மிகுபாசித் திங்களினிற்—றூமமரப்

126. பேரா மயனையழைப் பித்தா லயநிறைந்த
சீரார் பரிவார தேவதைக—ளேராரும்

127. நஞ்சத்தி மாரிவைக ணன்கியற்றி யேபதிட்டை
அஞ்சனெடு மாறுதிக்க வாற்றியபின்—செஞ்சவே

128. அந்த மதியி லசுபதியில் வான்புலவர்
கொந்தளித்துப் போற்றக் கொடியேற்றி—விந்தையுடன்

129. ஆயிலியந் தன்னி லருந்தேர் விழாநடத்திச்
சேயிலங்கு வாமகத்திற் றீர்த்தவிழா—நேயமுடன்
130. கண்டுநம்பாற் சேர்தியெனக் கண்டுவந்து நின்றமஞ்ஞை
கொண்டிட்டச்சா ரூபங் கொடுத்ததற்பி—னண்டரெலாம்
131. போற்றவிமா னத்தேற்றிப் போதிநம்பேர் கொண்மலைக்கென்
றூற்ற லளித்ததனை யாண்டபிரான்—றேற்றுபஞ்ச
132. பாண்டவர்க்கு முன்னுகத்திற் பாகாகத் தேர்நடத்தி
ஆண்ட முகிலு மவன்மனையு—மீண்டுலகில்
133. மைந்தனிலாத் தன்மையுப மன்னியம காமுனியாய்
வந்தகுரு வின்பால் வழுத்துதலு—மைந்தமுனி
134. காரார் மயூரகிரி காணிலுண்டா மைந்தனெனச்
சீரார் பலவிரதஞ் செய்துதொழ—வாராருஞ்
135. சாம்பவியா மாதுதரந் தன்னிற் பலர்புகழச்
சாம்பனெனு மைந்தன் றனைக்கொடுத்தோ—னும்பன்மலர்
136. மாயூ ரபுரமச்சு வத்தபுரங் கண்ணபுர
மாயூ ரகிரியென மன்னுபெயர்—மீயூர்
137. அகத்திற் றெளிந்தடியா ரன்புடனே வந்தித்
துகத்திற் கொடுபேர்சொல் லூரன்—சகத்திலுயர்
138. வெள்ளியுட னூரல் விரத மிருப்பவர்கள்
உள்ளப் படிவந் துதவுவோன்—கள்ளமின்றிச்
139. சட்டிவிர தம்புரிந்த சங்கரிக்கு மிந்திரற்கு
மிட்டமுட னேமகப்பே றீந்தவள்ளல்—வட்டையினிற்
140. செல்லுமக வில்வணிகன் சேர்ந்தன் றிரவுதங்கப்
புல்லுமகப் பேறளித்த புண்ணியவான்—மல்லிலுயர்
141. ஆரம் பொருந்து மர்ச்சுனர்க்கு நீங்காத
வீரங் கொடுத்த விசாகேசன்—நீரமிகு
142. கும்ப னனந்தங் குவடிருக்க விந்தமலை
அம்புவியில் வேட்கறிக மாயினதென்—சம்புவே
143. சாற்றுமௌனவாதியினுந் தந்தமயில் சாபத்தை
யேற்று மயின்மலையா யெய்தவதி—லாற்றலயிற்

144. கந்தன் வதிவதனாற் காசினியின் மற்றமலைக்
கந்த மலையே யதிகமெனச்—சந்ததமும்
145. வந்துதொழு கும்பமுனி வன்குறையெ லாந்தீரச்
சிந்தையினில் வேட்டதெலாஞ் செய்தகந்தன்—நந்துதவத்
146. தாசகன்ற மாமுனிவ ராம்வசிட்டர் புத்திரரைக்
கோசிகனால் மாசாபங் கூறியே—நீசரெனச்
147. செய்தமையி னாற்புத் திரசோகங் கொண்டுவிம்மி
உய்திறங்கா ணாமுனிவ னோடிவந்தே—மெய்தியங்கும்
148. ஆபத்தைத் தீருமென வர்ச்சனைபா தத்தியற்றச்
சாப விமோசனஞ் செய் சண்முகவேள்—கோபமுடன்
149. அச்சாப மிட்டமுநி யானவிஸ்வா மித்திரனை
நச்சார் பிரமகத்தி நண்ணுதலும்—விச்சானம்
150. இன்றியடி வீழ்ந்தலற வேகும் பிரமகத்தி
குன்றவே தாந்தக் குருவானோன்—றுன்று
151. புரங்கொ ளருணையிலோர் போதுற்ற வேதன்
சிரங்கண்டே னென்னுநவை தீர—வுரங்கொண்டு
152. சித்தி தரும்பூசை செய்தவுடன் புத்திவரச்
சத்தியலோ கத்துவைத்த தாட்டிகவேள்—நத்துவினை
153. தையாருந் தாய்பொருட்டுத் தாழ்கருட னெற்கமுத
மையாதா வென்ன வருளினோன்—மையான
154. வஞ்ச நமுசி வருத்தத்தால் வானுலகத்
தஞ்சுதரு மன்பயந்தீர்த் தாண்டகுகன்—விஞ்சுகதிர்
155. வானவர்க்குந் தன்மலையில் வாவிதொட்ட பஞ்சவர்க்குந்
தீனமத னுகருமருள் செய்தபிரான்—ஞானமுறும்
156. சென்னிமிசைக் கங்கை திங்கள் சேர்தலினாற் சங்கரன்
போன்
மன்னிவள ருஞ்சிகண்டி மாமலையான்—சென்னிகரும்
157. பாற்றினா னஞ்சப் பனவனஞ்சச் சூரொடும்போர்
ஆற்றினா னாற்றெழுசே னாற்றினான்—றேற்றமிலா
158. வீட்டினா னென்பாசம் வீட்டினான் றேவரைவான்
நாட்டினா னன்னேம நாட்டினான்—கோட்டுமலை

159. மாவோங்கு துங்கநெடு மாலைநிக ராகவகப்
பாவோங்கு குன்றைப் பதியினான்—மாவோங்கல்

160. வார்பொருந்து தெய்வானை வள்ளிவிழி—வண்டுமொய்க்க
மார்பிலங்கு தண்கடப்ப மாலிகையான்—பார்பொதிந்த

161. சேடன் படநெளியத் தென்கூற் றுவனொடுங்க
ஆடகலோ கத்தா ரகநடுங்கப்—பீடமரும்

162. வானத் துடுவுதிர வாம்பரியேழ் கட்டுவையன்
தானத்து நின்று தடுமாற—மானத்துச்

163. சந்திரனு முட்கத் தரணி நடுநடுங்கத்
தந்தி யெட்டு நின்று தலைபனிப்ப—வெந்தழற்கண்

164. மானாக மெட்டு மதிமயங்கத் தெண்டிரையும்
வானாகத் தோடு வதியெழும்பத்—தானாக

165. ஓங்கிச் சிறையடிக்கொண் டும்பருல விப்பணியின்
பாங்கிலூறு மஞ்ஞைப் பரியினான்—றாங்கையனைக்

166. கூறுமடி யாரகத்திற் கொள்ளிருணீக் குங்கருணை
மீறுந் திருஞான வேழத்தான்—சீறடியைச்

167. சேவிப்ப வர்க்குத் திருவருளுண் டாக்குமெனக்
கூவிவருங் கோழிக் கொடியினான்—தேவியல்செய்

168. வண்ணமலர்ப் பாதமிசை வந்திப்பார் சிந்தையெண்ணந்
திண்ணமென வேய திருமுரசான்—கண்ணகன்ற

169. பாத்தேரான் பான்மொழிசேர் பாரதிமா மன்காணாப்
பூத்தேரான் பாலடைந்த பொற்றேரான்—வத்துமுயர்

170. கெண்ணியஞ்சேர் துங்கக் கிரியினான் சொல்லனைத்தும்
பண்ணியல் சேர் மாதரிரு பாலுமுளான்—உண்மைசெறி

171. பத்தர்க் கருள்புரியும் பாவலவ னெங்குநிறை
கத்தன் புலவர் கவிக்கருள்வோன்—சித்தமகிழ்

172. நந்தி பரம்பரையி னல்கருணை யாதீனத்
திந்தணிவோன் வாயா லினிதியம்ப—வந்திலகு

173. சைவா கமம்விளங்கத் தாரணியி லாலயங்கள்
மைவார்பைங் கூழ்போல மன்னிநிற்ப—மெய்வாய்ந்த

174. சீராருந் தெய்வ சிகாமணியென் றேயுதித்துப்
பாராள் குருமரபிற் பார்க்கரன்போ— லேராருந்

175. தன்மகர்த்தா வாகியிந்தத் தாரணியெல் லாம்புகழுஞ்
சின்மயனு மாறுமுக தேசிகனு—நன்மைதிகழ்

176. காறுபாரென் றேபொருமை கைக்கொடைகாட்டுஞ்சிறந்த
காறுபாரென் றேபுலவர் கண்டுரைக்குஞ்—சீர்போர்த்த

177. தண்மை திகழுஞ் சபாபதியா மாமுனியுந்
திண்மையதி காரஞ் செலுத்திவரும் வண்மைதிகழ்

178. ஆறுமதி சூடி யமர்கொடுங்குன் றுதியவாய்க்
கூறுபுகழ் மேவுமைந்து கோவிலுக்குண்—மீறுதரு

179. குன்றைக் குடியுய்யக் கொண்டான் சிறுவயலும்
வன்றில்சேர் சாளி வடக்கூரு —நின்றிலங்கும்

180. பாந்தமுறு நேமம் பலவாங் குடிசொக்க
னேந்த லிடைசாத்த னேந்தலுடன்—சேர்ந்தசிங்க

181. மங்கலமிந் தத்தலத்தின் மான்மியஞ்செய் பாவலவர்க்
கெங்கும் புகழ்மருதப் பேந்திரமான்—மங்குலெனச்

182. சேயக் கதிருஞ் செழுமதியு முள்ளமட்டும்
ஈயப் பெருஞ்சவுரி யேந்தலுஞ்சீர்த்—தூயபுகழ்

183. ஆத்தன் குடியுமிவை யன்றிமற்றச் சீரூரும்
ஏத்திப் புகழுவுய ரோர்வளமுஞ் - சேர்த்த

184. குடிவளமுஞ் செய்தவர்பாற் கொள்வரவி னாலும்
அடியரிடு காணிக்கை யாலும்—படியதனில்

185. ஆதாயங் கூட்டியுய ராபரணம் பாத்திரங்கள்
பாதாரும் பட்டுப் பரிவட்ட—மீதாக

186. வேண்டுவது மிக்கவரு வித்துத்தா னீகரென
வீண்டுலகம் போற்ற வினிதமர்ந்து—தூண்டு

187. நிகமாக மந்தெளிந்து நீலகண்டர் பெற்ற
குகனுமே மேயகத்திற் கொண்டு—பகருமுயர்

188. ஆதிசைவ வேதியரி லன்பு திகழ்ந்திடவி
பூதிருத்தி ராக்ஷம் புனைந்துவளர்—நீதியுடன்

189. சீர்மேவி வாழ்சித் திவிநா யகநம்பி
கார்மேவு கைவெங் கலவநம்பி—நார்மேவு

190. பெற்றிதிக ழுஞ்சுப் பிரமணிய நம்பிகன
நற்றவர்போற் றுஞ்சாமி நாதநம்பி—யுற்றவிவர்

191. சந்ததியோ ராகமவே தச்சார்பி னாலுவந்து
கந்தவென வேயாறு காலத்துஞ்—செந்திருவார்

192. பூசைபுரி யப்பணியைப் போற்றுநிர்வா கந்தளியில்
வாசற்கா வற்செய் வைராவி—நேசமுடன்

193. செய்யும் பணிவிடைகள் செய்யமே கத்தையொப்பாய்த்
துய்யவிரு மேளத் தொநிமுழங்க—வையகத்தில்

194. நித்தியமும் பூசைகொண்டு நேய மிருந்தோங்குஞ்
சித்திரைக்காப் பாற்றுஞ் செயமுருகன்—நத்திவரு

195. மாச விழாப்பன்னிரண்டின் மன்னிவரு கார்த்திகையிற்
தேசமகிழ் நாகலிங்கஞ் சேர்வைசெய்த—தேசமரும்

196. மண்டபத்திற் றங்கி மறையவர்செய் பூசையுட்கொண்
டெண்டிசைபோற் றும்புனவா யின்முதன்மை—
கொண்டகுரு

197. சோதிமய மாய்ப்புரிந்த துங்கவெள்ளி மஞ்ஞையின்மேல்
வீதிவலம் வந்தெனையாள் வேன்முருகன்—காதிபெற்ற

198. தையுத்தி ரட்டாதி தங்குகொடி யேற்றமதில்
அய்யனருள் சேரருணை யாதீனர்—செய்யிலகு

199. பாலையநாட் டார்தருவார் பைங்கனியிற் றேனொழுகு
கோலமுறு செவ்வரசன் கோட்டையினார்—சீலமுடன்

200. சீர்சேர் தலத்தார் திருப்புனவா யின்முதன்மை
யார்சிவகங் கைக்கரச ரானதுங்கர்—நீர்சூழுங்

201. கூவிலிளை யாத்தங் குடியிலுற்ற காவலர்கள்
பூவிலுயர் சேது புராணமதை—நாவினிடை

202. நேசமுடன் சொன்ன நிரம்பவழ வாதீனர்
வாசமலர் தூற்றி வணங்கவே—பாசொளிசேர்

203. சாலமண்ட பங்களினிற் றங்கியே யொவ்வொருநாட்
கோலவிழா வன்புடனே கொண்டருளி—ஞாலமெலாம்

204. ஆண்டமரு தேந்திரமா லாற்றிவைத்த தேரினிடை
யீண்டுலகம் போற்ற வெழுந்தருளிப்—பாண்டியனார்

205. மண்டலத்திற் கண்டுகொண்ட மாணிக்க நாட்டதிபர்
எண்டலத்தார் வாழ்த்தவடத் தேறிநின்று—
தொண்டுசெய்ய

206. வீதிவலம் வந்துதுங்க வேதியர்க்கு மந்தணர்க்கு
நீதி தெளிந்தசிவ நேசருக்கும்—கோதிலாப்

207. பூமா னருள்பெருகப் புங்கவன தானமிகுஞ்
சீமா னெனுங்காடன் செட்டிவள்ளல்—தேமாரி

208. துன்றுமலர் மாலிகையாற் சோடித்த மண்டபத்தில்
அன்றிரவு தங்கி யருள்புரிந்து—மன்றலுறுஞ்

209. சீரகத்தார் மேவுகுஞ்சான் செட்டிதிரு மண்டபத்தில்
ஏரமரும் பூசத் தெழுந்தருளித் தீரமுறுஞ்

210. சால மறையவர்க்குஞ் சைவருக்கு மற்றவர்க்குங்
கோலமயிற் றீர்த்தங் கொடுத்தருளி—ஞாலமகிழ்

211. மாசி மகத்தின் மயூரம் புரிவிழவின்
மாசி லனதான மண்டபத்திற்—பாசிலகும்

212. இம்மயிலின் மேவி யிருமையிலி னோடுவந்து
மும்மையிலுங் காக்கு முருகேசன்—செம்மையுறுஞ்

213. அய்யனா ருக்கு மரியதுர்க்கை யம்மனுக்குஞ்
செய்ய திருவிழாச் செய்தபின்பு—துய்யதிருப்

214. பங்குனியிற் கார்த்திகையிற் பற்றுகொடி யேற்றமதில்
நங்கைதிரு வார்நேம நாட்டினார்—மங்கலஞ்சேர்

215. மண்டபத்தி லுற்றிரண்டின் மன்னுமன்ன சத்திரஞ்செய்
திண்டிறல்சேர் நாச்சியப்பன் செட்டியார்—கண்டபிள்ளை

216. யார்மண்ட பத்தருளி யங்குநின்று மூன்றுநாள்
சீர்சேரு மைந்தொழிலுஞ் செய்துவரு—மேர்சேர்ந்த

217. கம்மாளர் மண்டபத்திற் காட்சிதந்து நாலாநாட்
பெம்மா னருளே பெருகிவள—ரம்மார்

218. திருப்புனவா யின்முதன்மை சேர்ந்தார்க் கருளி
விருப்புடனைந் தாநாளில் வீரத்—தருக்குலவு

219. சிங்கமென வந்ததொத்தன் சேர்வைமண்ட பத்தினிடை-
பங்களஞ்சேர் வள்ளி மணங்கொண்டு—தங்கியே
220. ஆறுநா டன்னிலினை யாத்தன் குடியரசு
மாறுத வன்னியர்செய் மண்டபத்திற்—பேறுரச்
221. சேர்ந்தருளி யேழிற் சிறந்ததிருப் பாற்கடல்போல்
ஆர்ந்துவளர் செல்வ மனுதினமுஞ்—சார்ந்துநிற்கும்
222. மண்டுபுகழ் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்கள்
மண்டபத்திற் றங்கி மகிழ்ந்தருளிக்—கொண்ட வெட்டில்
223. தென்குழந்தை மன்னவர்கள் செப்மண்ட கப்படியில்
இன்ப முடனே யெழுந்தருளி—யொன்பதினில்
224. மன்னுதிரு வண்ணா மலையாதீ னத்துவள்ளல்
சென்னிகரு மாறுமுக தேசிகமான்—மின்னுசிவ
225. நேசமுட னேசிறந்த நித்யகர்மா னுட்டானப்
பூசைமுடித் துக்கனைத பொங்கவே—யீசனருள்
226. தங்கிவளர் காறுபார்த் தம்பிரான் சீரடியார்
வங்கியத்தி னோடோது வார்சீடர்—துங்ககுண
227. உத்தமதா னுபதிக ளுத்தியோ கச்சிறப்பார்
அத்தப் பிரம்பா ரரிக்காரர்—நத்துசமே
228. தார்சேவ கர்சூழச் சங்கரனு ரேமனைவெல்
லூர்மே வியகலைய ரொப்பான—சீர்மேவு
229. மாந்தருறை கண்டுகொண்ட மாணிக்க நாட்டாரும்
நாந்தகமின் சேர்நேம நாட்டாரு—மாந்தருவார்
230. பாலையநாட் டாரும் பணியுமடி யாரகத்தார்
மாலையொழி மற்ற மடாதிபரும்—வேலைசுற்றும்
231. நாட்டி லுய ரேழு நகரவணி கோத்தமரும்
பாட்டி லுயர் வோரும் பணிந்துநிற்க—வேட்டதனி
232. கந்தனது தானக் கணக்குவெளுப் பாராயர்
சந்ததியார் முன்மரியா தைப்படியே—சொந்தக்
233. கணக்கினைவா சிக்கவர்ச்ச கன்றருவி பூதி
யிணக்கமுள்ள மற்றவையு மேற்றுப்—பிணக்கின்றித

234. தேரின் வடம்பிடிக்கச் சீர்முகூர்த்தஞ் செய்தபின்பு
காரிற் கொடைதருசெங் கையரென—வீரியமே
235. மன்னிவளர் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்கள்
இன்னிலநாட் டார்க்கேற்ற மென்பதுபோற்—றுன்னும்
236. வடத்தின் மிசையேறி வாத்தியங்கோ ஷிக்க
நடத்தவுயர் வீதிவல நண்ணித்—திடத்தவிந்த
237. நாட்டரச னோடாதி னத்தாருக் குங்கனதை
காட்டு பரிவட்டங் கட்டியே—வாட்டிறலின்
238. மட்டடங்காக் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்க்குப்
பட்டி விரட்டைப் பரிவட்டங்—கட்டியபின்
239. தேரினிடை நின்றெழுந்து சில்லோதி யானவள்ளி
காரிருக்கும் வேந்தன் கனியுடனே—நாரிருக்கும்
240. ஞானவடி போற்று நகரத்தார் செய்யுமன்ன
தானமண்ட பத்திரவிற் றங்கியே—வானவர்கள்
241. போற்றவதி னின்றுபத்திற் பூமாரி கொண்டெழுந்து
சாற்றமுடி யாதவறச் சாலைகளு—நாற்றிசையும்
242. பூசை மடமும் பொருந்தும் படித்துறையும்
ஆசையுறுந் தென்னைகமு காசினியுங்—காசையுற்றும்
243. மங்குலுல வுந்தெப்ப மண்டபமு மைங்கரனும்
புங்கமுறும் வையா புரிக்குளத்திற்—றுங்கமுறும்
244. உத்திரத்திற் றீர்த்த முதவியபி னித்தடத்தைச்
சித்தம் மகிழ்ந்திடவே செய்துவைத்த—பத்தனெனுக்
245. தாண்டவரா யேந்திரமால் சந்ததியோர் முன்புநின்று
வேண்ட வவர்க்கு மிகுவரஞ்செய்—தாண்டவனும்
246. அங்குநின்று துங்கமயி லாடுபா றைக்கெழுந்து
பங்கசமின் சேர்நாக பாசத்தார்—துங்கமிகும்
247. செய்யமண்ட கப்படியிற் சேர்ந்து மனமகிழ்ந்து
வையகத்தோர் போற்ற வருமுருகன்— சையமதில்
248. காவடிகள் பேர்காணிக் கைமுடிக்கா ணிக்கைவள்
ளாவணக்கா ணிக்கையிவை யன்றியே—பூவினிடை

249. மற்றையகா ணிக்கையுங்கொண் டான்மருகன் சிந்தையினில்
உற்றவர மெல்லா முதவுவோன்—வெற்றிமதன்

250. வைகா சியினில் வருந்தன் விசாகமதில்
மைகா விரண்டு மனம்வெட்கக்—கைகாட்டி

251. எண்டிசைக்கு மீயு மிலங்கருணை யாதீனர்
மண்டபத்திற் றங்கி மகிழ்முருகன்—நண்டுகுளிர்

252. கன்னியினில் வெற்றியைமுன் காட்டுந் தசமியினில்
உன்னிவளர் சோலை யுறைமயில்கள்—துன்னிநின்று

253. ஓகையுட னூட்டியஞ்செய் யுய்யக்கொண் டானிலுறை
பேகனென வாழ்சுப் பிரமணிய—மாகனன் செய்

254. தந்திமுகன் மேவுந் தடாகக் கரையிலுற்ற
மந்திரமொப் பாஞ்சாளி மண்டபத்திற்—கந்துகத்திற்

255. சென்றுதங்கி யாவுமருள் செய்து மயில்வடிவாங்
குன்றினிடை வந்தாள் குமரேசன்—வென்றியுறும்

256. ஐப்பசியிற் பூர்வபக்ஷத் தாறு தினத்தினுக்குள்
எப்பு வனத்தோரு மின்புறவே—யொப்பிலாச்

257. சூரன் முதலான துட்டரையெல் லாந்தொலைத்து
வாரமருங் கொங்கைமட வாருடனே—தீரமுடன்

258. மாலையொப்பாங் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்கள்
தாலமகிழ் மண்டபத்திற் சார்ந்தேழின்—ஞாலமெலாங்

259. கூறுபுகழ் சேர்நடுவக் கோட்டையனூர்—மண்டபத்தில்
வீறுதெய்வ யானைமணம் வேட்டருள்வோன்—நாறுதுழா

260. கண்ணனூ ரொப்பான கண்ணனூர்ப் பிச்சுவையர் [ய்க்
பண்ணுசமா ராதனைகொள் பாவலன்—வண்ணமுறும்

261. வாதிட்டம் பாக வதமழகர் சேய்க்கவிதை
நீதிச் சவுந்த ரியலகரி—சோதிமிகுஞ்

262. செந்தமிழா லின்னுஞ் சிலபாவும் முன்பாடித்
தந்தநிம்பை யூர்மறையோர் சந்ததியில்—வந்துசரண்

263. பாடுமுத்து வேங்கடசுப் பைய னுலாவினைக்கொண்
டாடு முருக னமரேச—னீடுமழைக்

264. கார்த்திகைமா தத்தின்முரு கர்க்குவந்த கிர்த்திகையிற்
சீர்த்திமிகு மடியார் சேவிப்பக்—கீர்த்திபெற்ற
265. மாதங்க மாமுகனு மன்னுநவவீரர்களுங்
கோதமிலா தோங்குவள்ளி குஞ்சரியும்—போதவுடன்
266. அன்புமய மாஞ்சிகண்டி யத்திரியை விட்டிரங்கி
இன்ப மயின்மே லெழுந்தருளி—மன்புகழ்சேர்
267. ஞாலமெலா மேத்துதெய்வ நாயகனு ரும்வணிகன்
சீல வருப்பிற் சிறுகுளத்தூர்— சால
268. உடையான்றன் சந்ததியி லோங்குகவிக் கியச்
சடையா னெனவெவருஞ் சாற்றுங்—கொடையாளன்
269. காவலரெலா மதிக்குங் காரைநக ராதிபதி
நாவலர்வாழ்த் துந்தெய்வ நாயகமா—லாவன்மிகு
270. மைந்தனென வோது மகாகனவான் கற்பகம்போல்
வந்த கறுப்ப வணிகமால்—சிந்தைமகிழ்
271. பின்னுக வந்துதித்த பேகன் கவிப்பயிர்க்குச்
சொன்னமழை பெய்யுமருட் சூர்கொண்டன்—
மன்னுகல்வி
272. ஞானவரு ளுசலவே ணல்கியேசே யாகவந்த
தானகர்ன னும்ராம சாமிவள்ள— லானவிவர்
273. கந்தகிரி யோவடியார் கன்மனமோ மாமறையோ
இந்தணிவோன் றாநீற் றெழிற்புயமோ—கந்தமிகு
274. சீலத்திணைக்காவல் சேர்வள்ளி மன்றல்செய்த
கோல மணவரையோ கூறுமென்னச்— சாலவே
275. அந்தணர்யா வர்க்கு மனதான மோங்குதண்ணீர்ப்
பந்தருடன் சட்டி பசனையிவை—சந்ததிகள்
276. தோறுந் தழைத்துச் சுடர்மதிய முள்ளமட்டு
மீறு புகழுடனே மேன்மையுறக்—கூறுஞ்
277. சிகையண்ட கோளமுட்டச் செய்த திருக்கார்த்
திகைமண்ட பத்திடையே சேர்ந்து— வகைவகையாய்க்
278. கந்ததயி லம்பஞ்ச கவ்விய மைந்தமுதஞ்
சந்தநறு நெய்பா றயிர்கனிக்கில்—வந்தசெழுஞ்

279\. சாறுபழச் சாறிளநீர் சந்தனமீ ருகமத்தின்
ஆறுபெறச் சொன்மனுவா லாட்டியே—தேறியடியார்

280\. மண்டுதிரு வண்ணா மலையாதீ னத்தார்கள்
பண்டுதந்த பீதாம் பரமணிந்து—முண்டகமான்

281\. சேருமகர காரப்பிர திட்டைதடா கங்கனதை
சாரு மனதானச் சத்திரங்கள்—காருலவு

282\. பொன்மண்ட பங்கோ புரமா லயமிரத
முன்மண்ட பஞ்செய் முறைமையாற்—றன்மம்

283\. புரிமருது பாண்டியன்செய் பொன்னின் முடிசுந்
தரிய மிருகவசந் தம்மை—பரிமுதலோர்க்

284\. காறுதலைச் செய்யவந்த வங்கத்து மின்பஞ்சார்
ஆறுதலைக்கு மணிவித்து—மீறுசடை

285\. ஆதியணி சின்னமதி யன்ன நுதன் மீதினில்வி
பூதி திலகம் புனைவித்துக்—கோதிலாச்

286\. சிந்தையுள நக்கீர தேவ னருணகிரி
செந்தமிழ்ப்பா வுண்ணுஞ் செவியிடத்தே—சுந்தரஞ்சேர்

287\. தாலப் பருதியெனத் தங்கு—மணிபதித்த
கோல மகரக் குழையணிந்து—சீலமழைக்

288\. காரானை யக்குயிலைக் கண்டுமொழி வள்ளிமுலைப்
போரானை முட்டும் புயமீதிற்—சீரான

289\. விண்ணைமருட் டும்புலவர் வேந்துமட மாதினிரு
கண்ணை மருட்டங் கதம்புனைந்து—வண்ணமலர்த்

290\. தானஞ் சொலித்திடவே தாவுமறி யாச்சாம
கானஞ் சொலிக்குமெழிற் கண்டத்தே—மானனவ

291\. ரத்தினப்ப தக்கமுத்தா ரங்கன கப்பதக்க
முத்தொளிர்பத் மப்பதக்க மும்புனைந்து—கத்தரியிற்

292\. கோட்டுவடி வேன்மாவைக் கூறுபடுத் தித்திறமை
காட்டுவடி வேல்பிடித்த கையினுக்கு—நாட்டிலும்

293\. அற்கவரு மென்றனந்த மங்குதித்த தென்றுசொலப்
பொற்கடக மென்றுமின்னப் பூட்டியே—விற்கவரும்

294. செய்யபவ னத்தைச் சினந்தலைவா யோட்டுதலால்
வெய்யவெனத் தள்ளும் விரலினுக்குப்—பையயவே
295. முண்டகத்தின் செவ்விதழின் மோதுவரி வண்டெனவே
அண்டமெலாம் வாங்குகணை யாழியிட்டு—மண்டலத்திற்
296. கற்பகன்மால் வள்ளிதந்தை கையதனு லோதியிட்ட
பொற்பமருஞ் சோமன் புனைமருங்கி—லற்புதஞ்சேர்
297. புத்தினத்தாற் கண்டு புகலும்விலைக் கெட்டாத
ரத்தினத்தாற் செய்தவரை ஞாண்புனைந்து—துத்தியஞ்சேர்
298. சந்த மறையிற் றருநாடர் சென்னியிலென்
சிந்தையின்மே வுஞ்செய்ய சீரடிக்குச்—சந்தமுங்
299. காவீர வென்றமரர் காசினியோர் போற்றிசைப்ப
மாவீரகண்டா மணியணிந்து—பூவேறும்
300. இப்பாரி லுள்ள விருபத்தெட் டாகமமுஞ்
செப்பாதி சைவரெனுஞ் சீர்மறையோர்—அப்பாருங்
301. கிற்று மதியோன் கிளைமிகும்வே தாகமத்திற்
சாற்றியதீ பாரா தனைபுரியப்—போற்றியே
302. கற்றபடி சிந்தை கசிந்துகனி யன்புமனத்
துற்றமறை யோர்வேத மோதிநிற்பப்—பொற்றொடியார்
303. மோகமுற்று விஞ்சையரும் முன்னே வியமாகப்
பாகவதர் சங்கீதம் பாடிநிற்க—வேகமில்சித்
304. தங்குந் திராவிடவே தத்தையொழிக் குங்கருணை
தங்குந் திராவிடவே தத்துடனே—துங்கமிகு
305 மாயூர மான மலைமான்மி யம்புகல
வாயூர காந்தம் வரையின்மிசைப்—பேயூரு
306. சேட்டைதவிர்த் தோன்செய் திருமுருகாற் றுப்படைசேர்
நாட்டு மருணகிரி நாதன் பாட்—டேட்டையுற்ற
307. போதுவார் தேனைப் புசிக்கவரு வண்டினம் போல்
ஓதுவா ரோதி யுளமகிழச்—சூதுவிளை
308. வித்தையன்ன கண்ணார் விளங்கியசெந் தாமரையார்
தத்தையெனப் புட்பாஞ் சலிபுரியச்—சத்திபெற்ற

309. தந்திமுகத் தோனுந் தனிவீர பாகுவென
வந்தவிற லோனும் வயிரவனு—மிந்திரனும்

310. சற்று மனமிளையாத் தானவர்க ளோடெதிர்த்து
வெற்றிபுரிந் தோங்குமட்ட வீரர்களும்—பற்றுமிகு

311. மாலுமயனு மறிவாக னத்தோனுங்
காலுமீ ராறு கதிரவருங்—கோலமுடன்

312. வள்ளைக் குழையசைய வந்தசெய மோகினிக்குப்
பிள்ளையென வந்த பிரபலனுங்—கள்ளமுள்ளார்

313. புந்தியுரு வீசனெழிற் பூசைக் கிடர்விளைத்த
தந்தையிரு தாளைத் தடிந்தோனுஞ்—சந்தவயல்

314. நத்திவருந் தென்மயிலை நங்கையுடம் பானகுட
வத்தியினை மாவைநிக ராக்கிறையு—நத்திக்

315. கலையோட மாவேறிக் காசினியோர் காண
வலையோடு வந்த வடியாரு—முலையாத

316. இந்திரவிற் போன்றுநுத லேந்திழைபாற் சங்கரனைச்
சந்திரவிற் செய்சுந் தரமுனியுங்—கந்தரத்தாற்

317. றுங்கை மகுடந் தகர்த்தமனன் வீட்டிலுற்ற
வேங்கைகொடு மாவாங்கு வித்தகனுந்—தேங்கமழும்

318. புத்தமுத மென்னப் புலவோர்கள் கூட்டுணவே
முத்தமிழுஞ் சொன்ன முனீசுரனு—மித்தரையிற்

319. காதுந் தொழில்படைத்த காலனையும் வேலதனுன்
மோதுஞ் சயந்தன் முதலோரும்—வேதியருஞ்

320. சூழ்ந்துநிற்ப மேளத் தொனியுடனே யெக்காளம்
ஆழ்ந்த கடல்போ லதிர்ச்சியுறத்—தாழ்ந்துநின்று

321. தும்புருவும் நாரதருஞ் சுந்தரே சன்மகன்பால்
இம்பர் புகழு மிசைபாடக்—கொம்பரன்னார்

322. பொன்னுமணி யும்புனைந்த பொற்குடங்கள் விம்மநின்று
மன்னு பயசா மரையிரட்டத்—துன்னியே

323. சீலமுறு மாறு திருமுகத்தை வேட்டடைந்த
கோலமதி போலுங் குடையோங்கச்—சாலப்

324. படத்துவச மாயெழுதப் பட்டுருபஞ் சேர்குக்
குடத்துவசம் வானிற் குலவத்—திடத்தமதி

325. புண்டரீகத் தான்போல்வி பூதிருத்தி ராக்ஷவளங்
கொண்டமறை யோர்வேதங் கூறிவரத்—திண்டிறமை

326. சேர்ந்தவுத்தி யோகச் சிறப்புடையோர் தஞ்சமெனச்
சார்ந்த வடியார் தமைச்சூழக்—கூர்ந்தபுகழ்

327. ஆரு மருணகிரி யாதீனத் தார்கணதை
சாரும் மகோரசிவா சாரியார்—பாருணான்மை

328. சார்ந்திடுமீ சானசிவா சாரியார் சைவவளம்
ஆர்ந்திடுநீ ரம்பவள வாதீனர்—சேர்ந்துவரத்

329. தாரணியி லுள்ளமன்னர் சைவர்வணி கோத்தமர்கள்
தீரமுள்ள மற்றவருஞ் சேவிப்ப—வாரையுமுன்

330. தாழவைத்த சூரன் றனைத்தடிந்து வானாடு
வாழவைத்த துங்க வரன்வந்தான்—காழகில்கொள்

331. சூதுக் கிசைந்தமுலைத் தோகைவள்ளி குஞ்சரியாம்
மாதுக் கிசைந்திடுபூ மான்வந்தான்—சேதுவனை

332. கட்டியிலங் காபுரியைக் கண்டநெடு மான்மகனைக்
குட்டிப் பொருள்கேட்ட கோவந்தான்—மட்டில்லா

333. திங்குறையு மன்ப ரிதயத் துயரகற்றச்
செங்கைவடி வேல்பிடித்த சேய்வந்தான்—மங்களஞ்சேர்

334. பாமாலை யோடுவண்டு பாடப் பரிசளிக்கும்
பூமாலை சூடும் புயன்வந்தான்—காமாரி

335. கன்னத் துபதேசங் கண்டவன்வந் தானெனச்சொல்
சின்னவொலி பேரொலியாய்த் தித்திப்ப—நன்னயஞ்சேர்

336. சேயா னருள்ஞானச் செங்கதிர்வந் தானெனவேல்
பூமான் கலையிற் புகும்வேளை—மீமேவு

337. திங்களுல வுங்கார்த் திகைமண்ட பத்தினின்றே
இங்கிதமாய் வேல னெழுந்தருளித்—துங்கமலைத்

338. தீப தெரிசனமத் தேவருடன் பூவருக்குஞ்
சோபை யுடனே தொழக்காட்டிக்—கோபமுற்ற

339. மங்குலுறு வாரியுவர் மன்ன முழங்குதல்போற்
துங்கமுற்ற மேளத் தொனிமுழக்குஞ்—சங்கையின்றி
340. ஆடகலோ கத்தி லமர்கந் தருவரெனப்
பாடகர்நின் றேத்துதிறப் பாட்டிசையுங்—கூடும்
341. இரதமொழி யாரரம்பை யென்னமுலை விம்மப்
பரதநட னஞ்செய்கின்ற பண்புஞ்—சரதமதிற்
342. தங்குமுரு கேசர்பிர தக்ஷிணைத்துக் கொன்ருக
மங்கையர்க ளோடு மனமகிழ்ந்து—துங்கமுறும்
343. மூன்றுபிர தக்ஷணமு முற்றியபின் வீதியினிற்
தோன்றி யடியார் தொழுதேத்த—வூன்றிவைத்த
344. தாலத்த தன்மடலைத் தங்கப் பிணித்துவைத்த
கோலமுறு தீபவிழாக் கொண்ருடளிச்—சாலநடங்
345. கொள்ளுமயின் மீதுபணி கொண்டவடி யார்குறைதீர்
வள்ளன் மறுகில் வரும்பொழுதிற்—கள்ளவிழுங்

(குழாங்கள்)

346. காவினிடைத் தூங்காக் கனியென்னச் செங்கமலப்
பூவினிடை வாராத பொன்னென்னத்—தாவியிந்த
347. மண்டலத்தி லோடாத மானென்ன—வானுலவு
கொண்டலுக்கஞ் சாத குயிலென்னத்—தண்டமிழ்சொல்
348. நாட்டிலொரு வீட்டி னவிற்று மொழிபகர்ந்தோர்
கூட்டிலடங் காதகிள்ளைக் கூட்டமென்ன—வாட்டமுறும்
349. அம்புயத்தை நாடாத வன்னமென வாரணிந்த
கும்பமுலை விம்மக் குழல்சோர—வம்புமலர்க்
350. கைவண் டினமோடக் காமனிக்கி ணுக
மொய்வண் டினங்கண் முரேலென்னத்—தைவண்டிற்
351. காதனைய கண்ணுரைக் காமன்விடா னென்றுசெழும்
போதனைய காணு புரமொலிக்க—மாதரெலாங்
352. கோலவட மேருவென்னக் கோபுரத்து மேடையிலுந்
தாலநிகர் கைநீட்டுந் தந்தியினுஞ்—சாலவே
353. சித்திரித்த வீதியினுஞ் செய்குன் றிடத்தினிலு
முத்தொழில்செய் மேனிலா முற்றத்தும்—பத்திசெறி

354. தெற்றியினு மாவணத்துஞ் செங்கமலம் விட்டுவந்த
பொற்றொடியார் போலப் புடைநெருங்கிக் கற்றவர்பாற்
355. பொங்குமறை யின்பாலன் புற்றோர்பா—லெப்பொழுதுந்
தங்குசர ணாரவிந்தத் தைவணங்கித்—திங்களன்ன
356. ஆறு முகமு மயில்வேலுஞ் செவ்வாயும்
ஈறுகொடுக் காப்பன் னிருபுயமு—நீறுதிகழ்
357 நெற்றியிட்ட பொட்டு நெடுவிழியுந் தண்கடம்புங்
கற்றைக் குழலார் கணைமயக்கச்—சுற்றிநின்றே
358. ஆர மதனு லலங்கிருதஞ் செய்ததன
பாரமெலா மேதோ பசந்ததென்பார்—மாரனையே
359. செற்ற விடையீர் செழுங்கமலக் கையதனுற்
சுற்றுகலை போனதென்ன சொல்லுமென்பார்—
குற்றமில்லா
360. வங்கமுற்ற வாரி வடவையினிற் றண்கிரணத்
துங்கமதி யுஞ்சினந்து சுட்டதென்பார்—தங்கமன்ன
361. கட்டழகி கொங்கைதங்கு கச்சுப் படீரெனவே
விட்டகன்று போனதென்ன விள்ளென்பார்—கெட்டமத
362 அங்கசவேள் செய்கொடுமை யத்தனையுங் கண்ணுதல்சேர்
புங்கவன்பா லக்கறிவிப் போமென்பார்—சங்கமுற்ற
363. வேலைத் தொனியடரும் வேலைமுரு கன்கரத்தார்
வேலைத் துதிக்கில் விடுமென்பார்—காலைமலர்
364. பங்கயப்பா தத்தையன்றிப் பற்றிலா வென்வார்த்தை
யுங்கயப்பா தத்தை யொழியென்பார்—சங்கரனார்
365. தங்க மனமுருகா சண்முகசுந் தரநினது
துங்க மனமுருகா தோவென்பார்—சங்கநிறை
366. அந்தரங்கம் வாய்விட் டலறவென்றோ வென்மனத்தின்
அந்தரங்கந் தன்னை யறியென்பார்—பந்தமுற்ற
367. என்பழனி வந்தசடை யீசன்மைந்தா நின்னைவிடோந்
தென்பழனி வந்தவர சேயென்பா—ரின்பரச
368. ஆலையுற்ற கையனைப்பெற் றாலையுற்ற மான்மருகன்
மாலைதந்தா னீங்குமெம் மாலையென்பார்—வேலையுற்ற

369. ஆரமணி யம்புயமே லன்றுதினை காத்தவள்ளி
பார முலைத்தழும்பைப் பாரென்பார்—தீரமிகு
370. செச்சைத் தனத்தினுக்குஞ் சீர்வாயி னுக்குமெல்லாங்
கச்சுவிட்ட தென்று கழறுவார்—கைச்சரத்தால்
371. என்றனத்தை மாரனைத்த தெல்லாருங் காணில்வைவர்
என்றனத்தை மாரனைமா றென்றுசொல்வார்—
துன்றிசூழ்
372. மாவினையென் மாவினையென் மன்னுபனி போலகற்று
மாவினைமுன் வெல்லு மரனென்பார்—பூவிற்
373. கருப்பரங்குன் றச்சரமார் கைதொழத்தித் திக்குந்
திருப்பரங்குன் றத்தமருந் தேனே—யிருப்பனைய
374. காரலைவா யாலுண் கதிர்போற் றுவர்படருஞ்
சீரலைவா யாருஞ் செழுமுத்தே—யீர
375. மருவாவி னன்குடில மாற்றுதரு வாருந்
திருவாவி னன்குடிவாழ் சேயே—திருவார்
376. மருவேர கத்துறையு மான்முதலோர் போற்றுந்
திருவேர கத்துறையுந் தேவே—குருவே
377. தொழமுதிரும் பத்தியிலாத் துட்டரையுங் காக்கும
பழமுதிருஞ் சோலைமலைப் பாலா—கழற
378. மலையுமிருக் குங்கலையும் வந்திக்க வெல்லா
மலையுமிருக் குஞ்செயபூ மானே—கலைகலையாச்
379. சோமவத னவெனவே சூழ்மடவா ரைச்சினத்துக்
காமனலர்ப் பாணர்விட்ட கைசலிப்பத்—தாமரையார்
380. போதனுக்கு மெண்ணிற் புகலமுடி யாமறுகின்
மாதருறு மாதர்பலர் மாலையுறப்—பேதைமின்னாள்

1. பேதை.

381. வண்ண முலைப்பால் வருமிளமான் கன்றனையாள்
கிண்ணமுலைப் பாலுண் கிளிப்பிள்ளை—கண்ணகன்ற
382. பங்கத்தின் பாலுற் பவிக்கா வனசமுகிழ்
எங்கு முலவா விளங்தென்றற்—பொங்குமதக்

383. காமாதி வித்துக் கலக்கா மதபாணந்
தேமாவி லாராச் சிறியகுயில்— பூமாதர்
384 வன்மைதிக ழுந்தலைவர் வானத் திறந்துதிக்குந்
தன்மையினைக் காட்டுமிளந் தந்தத்தாள்—மன்மறுகில்
385. இட்டமுள்ள மாதருட னேய்ந்து சிறுவீடு
கட்டிவிளை யாடுங் கருத்தினாள்—வட்டமுலைப்
386. பந்தா லமைத்துப் பரிமளவா ரம்பதக்கந்
தந்தா யரையிடவே சாற்றுவாள்—தந்தொழிலிற்
387. சீலமுள்ள கம்மாளர் செய்தமரப் பிள்ளையைத்தன்
பாலனெனப் பாராட்டும் பண்பினாள்—கோலமுள்ள
388. வள்ளியென்று மானை வளர்த்திடுதெய் வானையென்றுங்
கிள்ளையைச்சொல் லென்னக் கிளத்துவாள்—தள்ளுசிறை
389. அன்னத் தனைப்படுத்து மண்ணன் மணிமறுகின்
வன்னமயின் மீதே வரும்பொழுதிற்—கன்னி
390. இருவரையும் வேலினையு மெங்கு நிறைந்த
வொருவரையுங் கண்டங் கொருமான்—திருவிருக்கும்
391. கோகனத மென்னநயங் கொண்டமுகத் தாயிடத்தில்
வாகனத்தின் மீதென்னை வையென்று—ஞாகமுறும்
392. வேயே யனையபுய மெல்லியலுந் தன்மகளைத்
தாயே நமக்குத் தருமோகேள்—சேயேறு
393. வெள்ளிமலை மேலோர் விமலன் மருமகளாம்
வள்ளியினுக் கல்லாமல் வாய்க்குமோ—கிள்ளியினளு
394. சஞ்சரிக்கு மத்தருவிற் றங்கிறைவன் பெற்றெடுத்த
குஞ்சரிக்கல் லாதிருக்கக் கூடுமோ—வஞ்சியே
395. என்னப் புதல்வி யினைத்தேற்றி மாதுடனே
அன்னை முருக னடிவணங்கித்—தன்னிலத்திற்
396. செல்ல மயூரத் தினைவந்தித் தன்பரதன்
வல்லவத்தைச் சொல்லி வழுத்திவர—வல்லென்
397. பதும்பலாக் கொண்டுவிலைப் பாரா துயரும்
பொதும்பரிலான் ஞானிகள்போற் போந்தாள்—

பெதும்பை

398. வலையாள் கரத்தனெனும் வன்னெடுமா னெஞ்சத்
திளையாட்கு நேரே யிளையாள்—கிளையாரும்
399. பைந்தருவில் வைத்தவிரல் பார்ப்பவர்போ லாடவர்கள்
வந்துவந்து பார்க்கும் வளத்தினாள்—சந்ததமும்
400. ஏக்கமுறு மார னிசைந்திடுசே னாதிபதி
ஆக்க நினைக்கு மழகுடையாள்—காக்கமழும்
401. பூவும் மணிபதித்த பூணும் புனைவதற்காம்
ஆவ லிருக்கு மகத்தினாள்—கூவியே
402. ஆழ்ந்த கடல்சூழு மம்புவியெல் லாஞ்செயிக்கத்
தாழ்ந்தநா ணுற்ற தருவினாள்—சூழ்ந்தகலைப்
403. பாட்டறியா மூடர்மனப் பான்மை யுறினுமெல்லாங்
கூட்டிமுடிக் குந்திறமை கொள்குழலாள்—
நாட்டினுற்ற
404. வேற்றூர்க்குச் சென்றோரோர் வீடுதங்கப் பார்ப்பதுபோல்
கூற்றுவந்து தங்கநினைக் குந்திருக்காள்—போற்றிவளர்
405. தீங்கரும்பை யன்னமின்னாள் தேனுணவுண் டால்விரியுங்
கோங்கரும்பை வெல்லக் குவிமுலையாள்—பாங்கியர்வேட்
406. காதையுரைக் கும்பொழுது கன்னத்தே றாதவர்போற்
காதை யுதவுங் கருத்தினாள்—தாதையுற்ற
407. செந்தா மரையனமுஞ் செப்புமொழி சொல்கிளியுந்
தந்தா மரையாருந் தற்சூழ—நந்தாத
408. சீரமரும் மேடையினிற் செய்குன் றிடையமர்ந்து
வாரமருங் கொங்கைமட வார்துதிப்பக்—காரமருங்
409. கற்பகவண் டுங்கிளியுங் கன்னியிசை கேட்டுவக்க
வற்புதஞ்சே ரம்மனைபந் தாடியே—பொற்பமருஞ்
410. சல்லாப மாதருடன் றானிருப்ப வள்ளிபுணர்
வல்லாளன் வீதி வரும்பொழுதி—னல்லாரோ
411. டுற்றுமுரு கேச னுயர்பன் னிருபுயமுங்
கற்றவர்கள் போற்றுங் கதிர்வேலு—முற்றுமதி
412. அன்ன முகமு மணிதிலத முங்கடம்பும்
என்னையினி தாளு மிருசர ணுங்—கன்னியெதிர்

413. கண்டு தொழுதுபணி கன்னியர்பாற் றேறார்போல்
அண்டர்தொழு மாதரிவ ராரென்னக்—கொண்டல்

414. வணங்குகுழ லாயொருத்தி வானிறைவ னீய
இணங்கி யிருக்கு மிளமான்—சுணங்கிவருங்

415. கொங்கைமின்னாள் மற்றொருத்தி கூறுங்காற் றண்டலையில்
திங்க ளுலவுந் தினைப்புனத்திற்—சங்கரனார்

416. சேயன் கிழவடியாச் சென்று மிகுந்தபசி
ஆயினே னன்ன மளியென்னத்—தூயபுனத்

417. தேனுந் தினைமாவுந் தின்னத் தினக்கொடுத்த
மானு மருள்விழியம் மாதுகா—வானுலவு

418. மின்னே யனையவிடை மெல்லியலே யெம்பணிகொள்
அன்னே யெனவுரைப்ப வன்புடன்கேட்—டென்னிகரும்

419. ஆபரண மின்னவன மன்னமணி மாதருடன்
சாபநுத லாளகத்திற் றங்கினாள்—தாபமதன்

420. பூணுஞ் சரமனைத்தும் பூட்டியே விற்றொழிலைக்
காணு மெனவே களித்துநின்றான்—வாணலஞ்சேர்

421. சத்திவடி வேல்பிடித்த சண்முகவேள் குட்டுவக்கும்
அத்திக் கிளைய வயில்வேலன்—றுத்தியஞ்சேர்

422. வெங்கணர வப்பகைமேல் வீதியினிற் செல்லநின்ற
திங்க ளனையமுகச் செவ்வியாண்—மங்கை

423. கரியகுழ லார்மனத்திற் காமநூல் சொல்லும்
அரியநடை காட்டு மன்னம்—விரியுலகிற்

424. கூறுங் கொலையுங் கொடியமகா வஞ்சனையின்
வீறுங் குடிகொள் விழியினாள்—தேறியே

425. வந்திக்கா நின்றவிந்த வையகத்தோர் சிந்தையினில்
வந்திக்கா நின்ற வசனத்தாள்—செந்தமிழோர்

426. பாட்டையறிந் தீயமுக்கிர பாண்டியன்செண் டாலடித்தார்
கோட்டைப் பழிக்குமிரு கொங்கையினாள்—வேட்டையிலா

427. மானோக வந்தவிழி மாதரெலா மெப்பொழுது
நோ நோ மெனவே நுவலிடையாள்—தேனாகச்

428. சூடவரை வானவரைத் துங்கமதத் ஞெத்தமற்ற
வாடவரை வாட்டு மணங்கினுள்—சேடனேநேர்

429. ஆனநிதம் பத்தா ரருகிலுடுப் போலிருப்பத்
தானவரை யம்பாரி தன்னிலுற்றுத்—தீனமில்லாத்

430 திங்கள் வதனமின்னச் செந்தா மரையைநிகர்
தங்கையினி லம்மனையைத் தாங்கியே—மங்குல்

431. நெருங்கிய கொண்டை நிறைந்தடர்கின்ற
சுரும்பு வெருண்டு சுழன்று—வருந்த

432. மடந்தை சுணங்கு மலர்ந்து நிறைந்த
குடங்க ளலங்கல் குலுங்க—விடங்கொள்

433 அணங்கிரு கண்க ளருங்குழை துன்ற
வணங்கிடை நின்று வருந்த—மணங்கள்

434. நிறைந்த பதங்க ளொருங்கி யிருந்து
சிறந்த சதங்கை சிலம்ப—வறந்திகளுங்

435. கற்பகஞ்சேர் வல்லிதிருக் கையம் மனையாட
வற்புதஞ்சேர் மாத ரனைவர்களும்—விற்புருவத்

436. தேனே மடமயிலே சித்தவேள் சேனையெச
மானே மணியே மரகதமே—வானேறுங்

437. குற்றமிலாத் தாலவிறை கொண்டவன்றி லுக்குநனி
சிற்றிடையார் முன்புபகை செய்ததுண்டோ—
வெற்றியுடன்

438. ஏதத்தைச் செய்குயில்க ளென்றுமிறை கொள்ளுமென்றே
சூதத்தை வேலன் றொலைத்ததுவே—மாதத்தை

439. அன்னமொழி யாயென் றணங்கிடையார் சொல்லநயக்
கன்னன்மொழி வள்ளி கணவனுர்—நன்னயஞ்சேர்

440. வேலாயுதக் கடவுள் விண்ணவரெல் லாந்துதிக்கக்
காலாயு தம்பிடித்த கையினுர்—மேலான

441. மாமயிலின் மீது மறுகினிடைத் தோன்றுதலும்
மாமனைநேர் கையம் மனைநீக்கிச்—சோமவத

442. னத்தா ருடனெழுந்து நத்திப் பணிந்தேத்தி
வித்தார மாங்கவிகொள் வேலவனே—நத்தாருங்

443. கையன்மரு காநின் கழைப்புயத்தி லார்கடம்பை
ஐயவிடை யார்க்களித்தா லாகாதோ—செய்யகிடைக
444. கீனங் கொடுத்துமுருக் கின்மலரை வெல்லதர
பானங் கொடுத்தாற் பருகோமோ—ஞானமில்லாச்
445. சித்தங் கொடுத்துலையுஞ் சிற்றிடையார்க் குன்வதன
முத்தங் கொடுத்தக்கான் மோசமுண்டோ—முத்தனே
446. மாரன் கணைப்புணைநீ மாற்றி லுய்வோ மென்றுமென்றும்
தீரமிகு சிந்தை தெளியாம—லாரக்
447. குடங்கனத்து விம்மிமதக் கோட்டிமிஞ்சி வாரி
விடஞ்செறிகண் ணாண்மயலாய் வீழ்ந்தாள்—மடந்தை
448. ஒடிவின் மதன்கணையென் றோதும் பசிய
கொடிதளரா தோங்குகொழு கொம்பு—படியுலவு
449. கூந்தற் கருமுகிலுங் கோலத் துவரிதழுந்
தேர்ந்தகள மாகுஞ் செழுங்கமுகு—மார்ந்திலகு
450. தந்த முலையரும்புந் தந்தமுலை யுந்திகழ
வந்திற் கொடிநுசுப்பு வாடவே—கந்தரஞ்சேர்
451. மேடையின்மேல் வானிலகு மின்ன லுற வந்ததெனச்
சாடையறி யுஞ்சுந் தரவிழியார்—கூடிநிற்பப்
452. பாகுமொழி மின்னாள் பரமகுரு வீராறு
வாகுமயி லுங்கண்டு வந்தித்தாள்—தோகையாள்
453. நின்றாள் சிறிதயர்ந்தா ணெட்டுயிர்ப்புற் றாளிரண்டு
குன்றாண் மிகுமயலாற் கூறுகின்றா—ணின்றாதை
454. தேசமெல்லா மீன்றவுமா தேவியிருக் கப்புனலை
வாசமிகு செஞ்சடையில் வைத்ததென்ன—கேசவன்வேல்
455. நாட்டத்தி யாந்திருவை நாடாது முன்புசுடு
காட்டத்தி மேற்புரண்ட காரணமென்—
கோட்டமில்லாச்
456. சித்திபுத்தி யென்னுமிரு சிற்றிடையார் தாமிருக்க
அத்தி முகன் வல்லவைமா லாயினதென்—கத்துமுகில்
457. காசைக் குழற்பிடிக்குங் கான்மானுக் குந்தலைவ
ஆசைப் பெருக்கத்தி னாலன்றோ—நேசமுடன்

458. அஞ்சநடை மின்னாரை யங்கிருத்தி யிங்குவந்தாற்
கொஞ்சிமயலைத் தீர்த்துக் கொள்ளேனோ—வஞ்சனையேன்
459. வாருமென்றாள் கன்னி வதனார விந்தமுத்தந்
தாருமென்றா ளென்னைத் தழுவுமென்றாள்—சீரகத்தில்
460. வந்த பெரிய வரைப்பார்த்து நன்மைதரு
கந்தனைச்சே ராததென்ன காலமென்றாள்—சந்தச்
461. சரியகன்று நீங்கலிலாத் தன்மையுறு மத்திக்
குரியகலை சோரமய லுற்றா—ளரிவை
462. அலர்ந்த செயவனச மன்ன வடியாள்
விலங்குதலி லாப்புருவ வில்லா—ளலந்திகழுந்
463. திங்கண்முகத் தாளிந் திரகோபச் செவ்வாயாள்
அங்கமுற்ற மின்னனிக ராமிடையாள்—துங்கவுடல்
464. கொள்ளும் பணிகளைநாங் கொள்ளா விடிலுலகத்
தெள்ளுவர்தஞ் சிந்தைமிசை யென்றெண்ணி—
வள்ளமன்ன
465. கொங்கைக் குவட்டிற் குளிர்ந்திடுமுத் தாரமிட்டுத்
தங்கைக்குத் தங்கச் சரியணிந்து—பங்கசத்தை
466. ஒத்தநிதம் பத்துக் குயர்மே கலையணிந்து
கத்துசிலம் பைச்சிவந்த காலிலிட்டு—முத்திவருந்
467. துண்டப் பிறைநுதற்குச் சோதித் திலதமிட்டுக்
கண்டத்திற் பூமாலி கைபுனைந்து—வண்டணிந்த
468. அத்த விரலுக் கமைந்தகணை யாழியிட்டுத்
துத்தியஞ்செய் வீணையிடத் தோளேந்திப்—பத்தியுடன்
469. கந்தா குமரா குகாவேல வாவுமையாள்
மைந்தாதெய் வானை மணவாளா—நந்தாத
470. ஆசாபா சத்தை யறிந்தடியார்க் கீயுமுரு
கேசா மயூர கிரிவாசா—தேசான
471. சோதியே வேதாதி சொல்லதனுக் கெட்டாத
ஆதியே ஞான வருட்கடலே—நீதியே
472. அன்பே மறைப்பொருளே வாகமமே யென்கணத்தார்
இன்பமே தருண வெழிலியே—பொன்பேராப்

473. பூணாரம் பூண்டவள்ளி பூமானே யென்றுநய
வீணாகா னம்புரியும் வேளையினிற்—பாணாரும்
474. பாகை மொழியார் பலர்மயங்கத் தேவருடன்
தோகைமயின் மேன்முருகன் றோன்றுதலு—மாகமெலாங்
475. கண்டாள் செயவீணை கைவிட்டாண் மிக்கமயல்
கொண்டாள் மடவார்பாற் கூறுகின்றா—
ளொண்டொடியீர்
476. இன்மையுறு வேலவனைச் சேரா விடினமது
பெண்மைநலத் தாற்பயனென் பேசுமென்றாள்—
தண்மையுறு
477. சந்தனத்தி னேடுசுகந் தத்தைமட வாரிருக்குந்
தந்தனத்தின் மீது தரித்துவந்தா—ளந்துகிலைச்
478. சுற்றினாள் பின்னவிழ்த்தாள் சோருங் குழன்முடித்தாள்
அற்றிரள்போற் பின்னு மலையவிட்டாள்—கற்ற
479. கிரியையெல்லாங் காட்டியும்வேள் கிட்டாத தாற்சுந்
தரியமின்னாண் மாலாய்த் தளர்ந்தாள்—தெரிவை
480. மதனகலை யாயும் மதிமுகத்தார் நெஞ்சிற்
பதனமுறச் சொல்விவைத்த பாவை—கதமிகுத்து
481. விட்டுமகன் கைத்தநுவால் விட்டசரப் புண்ணுடலிற்
பட்டுத் தெளிந்த பதவாகி—யிட்டமுடன்
482. காதா வெனு மறிஞர் கையிற் கொடுத்திளைத்த
தாதாவைப் போலுந் தனத்தினாள்—கோதான
483. வானி லுறுமதிக்கோர் மானேயுண் டிம்மதிக்கு
மானிரண்டுண் டென்ன மதிமுகத்தாள்—கானிலமர்
484. மைநிகராய்ப் பாணம் வருடித் திளைத்ததநு
வைநிகரா யோதுபுரு வத்தினாள்—மைநிகராய்
485. நானங் கமழு நறுங்குழலி னாள்போது
மானவன்மை சேர்ந்த மலர்விழியா—ளீனமிலா
486. ஊசற் குழையி லுயர்மணிசேர் குண்டலத்தை
ஆசையுடனே யணிவித்தாள்—தேசமருஞ்
487. சூதாந் தனமடவார் சுற்றி யிடையிலுற்ற
பீதாம் பரமெனவே பேணினாள்—போதார்

488. மதுரங் கவர்கா மரவிழியா ரோடு
சதுரங்க மாடுஞ் சமயத்—தெதுவுங்

489. தருமுருகன் பத்தர் தமையாள வென்றும்
வருமுருகன் றுங்க மயின்மேற்—கருமுகிற்போற்

490. சின்ன மொலிக்கச் செயபேரி கையொலிக்கத்
தன்னனைய தாமத் தளமொலிக்கச்—சொன்னயஞ்சேர்

491. வேத மொலிக்க விளங்கா கமமொலிக்கச்
சூதமுனி காவியங்கள் சூழ்ந்தொலிக்கப்—போதனைய

492. கண்ணார் சிலட்பு கலீர்கலீ ரென்றொலிக்க
விண்ணோர்கள் வாழ்த்து விரிந்தொலிக்க—நண்ணாரை

493. வெல்லு மயி லானிருக்கும் வீதியினிற் றோன்றுதலும்
அல்லிமலர் நான மணிகுழலாள்—வல்லிபுகழ்

494. இக்கடம்ப னம்போலி யர்க்கிரங்கா னென்றுமிவன்
மிக்கடம்ப னென்றே மெலிவுற்றுத்—தக்கவரைக்

495. காரிருக்குஞ் சோலைக் கனிமுடவன் மாலுறல்போல்
நாரிருக்கு நெஞ்சா ணலந்தோற்றாள்—பேரிளம்பெண்

496. மெய்வாய்கண் மூக்குச் செவியெனவே பேர்பெற்ற
வைவாய வேட்கை யனுபவித்தாள்—கைவாய்ந்த

497. மாலாங் களிற்றின் மணிக்கோடும் பந்துமின்றுந்
தோலா முலையெனவே சொன்முலையாள்—மேலான

498. கானவித்தை யோடுமற்றக் காவியமெ லாந்தெளிந்த
மானமருங் கண்ணார் மருங்கிருந்து—தேனனைய

499. சேந்த னருளுந் திருவிளையாட் டும்பகருங்
காந்த முதலாங் கதையுரைத்துச்—சாந்தகுலை

500. மாதுரையும் வேளையினின் மாயச் சமணருடன்
வாதுபுரிந் தோன்மறுகில் வந்திடலுஞ்—சூதுமுலை

501. நங்கையர்கள் சூழ நளினக் கரங்குவித்துச்
செங்கைவடி வேலனைவந் தித்துநின்றே—யெங்கள்

502. குலதெய்வ மேகனியே கோவே மறைகள்
சொலவரிய ஞானச் சுடரே—யலகிலருட்

503. கற்பகமே தேனே கவிப்புலவர் சிந்தைவரு
மற்புதமே குன்றை யமர்துரையே—சிற்பரனே

504. வேதவித்தே யாகமத்தின் வேரே கலைத்தெளிவே
சீத மதிவனத் தேசிகா—நாதனருண்

505. மைந்தா செயந்திபுர வாசாபழநிமலைக்
கந்தா பரங்கிரிவாழ் காங்கேயா—சந்தார்

506. பொதியா சலமுனிவன் போற்றுமுரு கேசா
விதிஹாஸ மாய்விளங்கு மெந்தாய்—துதியாத்

507. தானவரை வாட்டுமயிற் சண்முகாவென் றுமின்னுள்
கானமுடனே துதிக்குங் காலத்திற்—போனமதக்

508. கோட்டி திரும்பிவந்து கூடுதலான் மெய்விளர்த்து
வாட்டமுறுஞ் செங்கை வளைசோர்ந்து—வேட்டவுளஞ்

509. சேந்தன்பால் விட்டுத் திருப்பவகை தேராமல்
நாந்தகமாங் கன்னிமய னண்ணினுள்—போந்தவிளம்

510. பேதைமுத லாகவுயர் பேரிளம்பெண் ணீருக
மாதரெலாங் கண்டு மயங்கவே—சீதரனும்

511. பேருடையான் றந்தவிரு பெண்ணுடையான் குன்றை
ஊருடையான் வந்தா னுலா [யெனும்

முற்றிற்று.

வெண்பா.

பூநாறுந் தேன்பொழிலும் பொன்னுமுத்த முஞ்சொரியுந்
தேனாறு சூழுஞ் சிகண்டிவரைக்—கோனாறு
பாலனத்தன் பாலனத்தன் பாலனத்தன் றேவர்பரி
பாலனத்தன் றாளினெஞ்சே பற்று.

பிழை திருத்தம்

பக்கம்		பிழை	திருத்தம்
1	வரி 21	பார்கலை	பாற்கலை
2	வெண்பா அடி 2 ல்	வுள்ள	யுள்ள
	கண்ணி		
3	1	கங்கைக	கங்கை
	8	நாகஞ்கரி	நாகங்கரி
		யாறுமிவை	யாருமிவை
4	24	மற்மெறரு	மற்றொரு
		ஞெடுமால்	னெடுமால்
5	26	தவஞ்சய்	தவஞ்செய்
	33	கரியாள்	கறியாத்
	38	செவ்விதிகள்	செவ்விதிகழ்
	39	எவ்விடத்தில்லென்ன	எவ்விடத்திலென்ன
6	42	தேற்றி	தேத்தி
	43	சீதவா	சீதவர
	45	லீ துநிற்க	லீ துநிற்கப்
7	56	சகத்தராட்தெட்	சகத்திரத்தெட்
	58	ஆற்றுதுபுத்தி	ஆற்றுவிதி
	66	தெய்தடியார்	செய்தடியார்
8	75	சொல்லிப்	சொல்லி
	81	தானென்ன	தாளென்ன
	82	அண்டர்பரண	அண்டாபரண
		பரணனுளன்	பரணனுரன்
9	90	வெழுந்து	யெழுந்து
10	100	விளக்கா	விளங்க

11	114	வதிவயாக	வதிவாயாக
12	141	அர்ச்சுனர்க்கு	அருச்சுனர்க்கு
13	153	தையாரும்	தையாகும்
	155	தீனமதனுககு	தீனமதனுக்கு
15	174	பார்க்கரன்	பாற்கரன்
	179	வன்றில்சேர்	மன்றல்சார்
16	194	மிருங்தோங்கும்	மிகுங்தோங்கும்
		சித்திரை	சித்தரை
	202	வாதீனர்	காதீனர்
17	207	தானமிகுஞ்	தானமிடும்
	212	இருமையிலி	இருமயிலி
		செம்மையுறுஞ்	செம்மையுறும்
18	223	செப்மண்டக	செய்மண்டப
	229	மாந்தருறை	மாந்[illegible]ருரை
	233	பிணக்கின்றித	பிணக்கின்றித்
20	260	பாவலன்	பாவலவன்
21	266	விட்டிரங்	விட்டிறங்கி
	271	சூர்கொண்டன்	சூற்கொண்டன்
	272	ணல்கியே	ணல்கிய
	278	கனிக்கில்	களிக்கில்
22	290	மானனவ	மானநவ
	292	நாட்டிலும்	நாட்டிலுறும்
23	298	சீரடிக்கு	சீறடிக்கு
	299	பூவேறும்	பூவீறும்
	305	பேயூரு	பேயூறு
	308	தாமரையார்	தாமரையால்
24	316	போன்று நுதல்	போன்ற நுதல்
		கந்தரத்தாற்	கந்தரத்தின்
25	325	புண்டரீகத்	புண்டரிகத்
	327	சாரும்மகோர	சாருமகோர

	328	ஆர்ந்திடுநீ	ஆர்ந்திடுநி
		வாதீனர்	காதீனர்
26	341	பரதநடனஞ்	பரதநடஞ்
		சரதமதிற்	சரதமதில்
	344	கொண்ருடளிச்	கொண்டருளிச்
	353	முத்தொழில் செய்	முத்தொளி செய்
27	363	காலை மலர்	காலைமலர்ப்
	365	தரநினது	தாகினது
28	372	வெல்லு	வெல்கு
29	385	வட்டமுலைப்	வட்டமுலை
	393	கிள்னியினஞ	கிள்ளையினஞ்
	396	துன்பரதன்	தும்பரதன்
	397	போந்தாள்	போந்தான்
		பொதும்பரிலான்	பொதும்பரிலார்
30	398	வலையாள்	வளையாள்
31	416	கிழவடியாச்	கிழவடிவாய்ச்
	426	தீயமுக்கிர	தீயுமுக்கிர
32	434	வறந்திகளுங்	வறந்திகழுங்
	436	சித்தவேள்	சித்தசவேள்
34	263	மூற்ற	முற்ற
	466	சினைந்த	சிதைந்த
	472	இன்பமே	இன்பே
37	506	துதியா	துதியாத

15

Anl 9
4171

3/
~~6d.E~~

